போன் நெ. 15. விலை 2 அணா. REGD No. 4642

# திராவிடநாடு

மலர் 13 3—4—55 இதழ் 39

## வாழும் வடக்கு—தேயும் தெற்கு




'மித்திரன்' தரும் சித்திரம்

# ஐந்தாண்டுத் திட்டம்

## நாடெங்கும் கண்டனம்

### டில்லியில் எதிரொலி

மார்ச் 20ந் தேதி, நாடெங்கும் தி. மு. க.வின் ஐந்தாண்டுத் திட்டக் கண்டன நாள், வெற்றிகரமாக நடைபெற்றிருக்கிறது. கழகத் தோழர்கள் நாட்டின் நானா இடங்களிலும் 'வாழும் வடக்கு! தேயும் தெற்கு!!' குறித்து விளக்கமாக எடுத்துரைத்திருக்கிருர்கள்.

எதிரொலிபோல, இதோ டில்லியில் டி. டி. கிருஷ்ணமாச்சாரி, பேசி இருக்கிருர்.

''நான் மந்திரியாக இருக்கிற வரையில், இந்திய பூபாகத்திலுள்ள சகல இடங்களுக்கும் நீதி கிடைக்கச் செய்வேன். ஒரு பாக்ரா நங்கல் நீர்ப்பாசனத் திட்டம் வடக்கே இருப்பதால் பிறஇடங்களைப் புறக்கணித்துவிட்டதாகச் சொல்வதுதவறு. அப்படி வடக்கே இருப்பதால், நாளைக்கு இன்னொரு பாகத்தில் பஞ்சமும் தேவையும் ஏற்பட்டு விட்டதென்ருல், டில்லிசர்க்கார் அதைப் பார்த்துக்கொண்டிருக்காது; வடக்கிலிருந்து, தேவையான இடங்களுக்கு, பொருள்களை அனுப்பவே செய்யும்'' என்பதாக. பொருள்களை அனுப்புமாம் வடக்கு! இறுமாவா— எனும் விஷயத்தை, நண்பர் ஆச்சாரியார், அறிவிக்கவில்லை.

எப்படி அறிவிக்க முடியும்! வியாபாரியாயிற்றே! விரும்பிய பொருளை, அனுப்பினுல் அதற்கான பணம் வடக்குக்குப் போகத்தான் செய்யும். இங்கிருக்கும் காத்தானும் முத்தனும்கொடுக்கும் காசு, அங்கே இருக்கும், ஆனந்தலாலுக்கும், ரத்தன்லால் சேட்டுக்கும் போகத்தான்செய்யும். அதுபற்றி எண்ண மாட்டார்கள் எனும் கருத்தில், தெரிவிக்கிருர் டி. டி. கே.

அவர் அப்படிச் சொல்லுகிற அதே சமயத்தில், சென்னை ஏடு 'மித்திரன்' சித்திரம் தீட்டுகிறது—வடக்குக்கே டில்லி, சகல பட்சணங்களையும் வைக்கிறது! தெற்கிலிருக்கும் தட்டோ, காலியாக இருக்கிறது!! என்பதாக. (அந்தச் சித்திரமே, இந்த இதழின், முகப்பில் இருப்பது. கேட்டதும், கொடுத்தனுப்பிய 'சுதேசமித்திர'னுக்கு, நமது நன்றி)

இவ்விதம், ஐந்தாண்டுத்திட்டம் பற்றி, மனப்புயல்—பல இடங்களிலும் எழும்பி இருக்கிறது. ஆச்சாரியார், அமைச்சர்! அதிலும், பண்டிதரின் 'நல்லெண்ணப் பார்வையை' சம்பாதிக்க வேண்டிய நிலையிலிருக்கிற அமைச்சர்!! அதனுல், அப்படித்தான், பேசுவார்.

ஆனுல், தென்னுட்டு மக்கள் பிரதிநிதிகளும், தேசிய ஏடுகளுமே டில்லியின் ஓரவஞ்சனையைத் தெளிவாக எடுத்துக்காட்டத் தவறவில்லை.

நமது கண்டனக்குரல், டில்லியிடமிருந்து நீதிவாங்கித்தருமா, என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டிய விஷயம்.

இப்போது, முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிந்ததும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் ஒன்று போட்டு அதற்காக ரூபாய் 6000 கோடி செலவிடுவதென்று திட்டம் தீட்டிக் கொண்டுள்ளனர்.

''இந்த 6000 கோடியில் தெற்குக்கு எவ்வளவு கிடைக்கும்? எவ்வளவு கொடுக்கப் போகிருர்கள்? இதைத்திட்டவட்டமாக டில்லி சொல்லுமா?'' என்று 27ந் தேதி காஞ்சியில் நடைபெற்ற ஐந்தாண்டுத்திட்டக் கண்டன நாள் கூட்டத்தில், கேட்டார் தி. மு. க. பொதுச் செயலாளர்.

அப்போது, இந்த ஐந்தாண்டுத் திட்ட' ஆசை, ஏனேற்பட்டது இந்தத் தேசியத்தாருக்கு!—என்பது குறித்தும் குறிப்பிட்டார். அதாவது, ''ஐந்தாண்டுத் திட்டம்!! என்று பெருமையாகப் பேசுகிருர்கள். நாட்டிற்கு அதனுல், ஏராளமான நன்மைகள் உண்டாகப் போவதாகவும் கூறுகிருர்கள். பத்துமாதம் கழிந்தால், குழந்தை பிறக்கும் என்பது நியதி! இதைப்போல, ஐந்தாண்டுத்திட்டம் என்று போட்டால்தான், நாட்டில் நன்மைகள் ஏற்பட முடியும் என்பதாக ஏதாவது ஒரு வரையறை இருக்கிறதா? இதே பணத்தைக் கொண்டு ஆருண்டுத் திட்டம், நான்காண்டுத்திட்டம் என்று போட்டால் நாடுநலம்பெருதா? வெளிநாடுகளிலெல்லாம் இப்படி ஐந்தாண்டுத்திட்டம் என்கிற பெயரையா வைத்தார்கள். ரஷ்யாவின் பாதையில் நாங்களும் நடக்கிருேம் என்பதைக் காட்டிக் கொள்வதற்காகவே இப்படித் திட்டம் தீட்டினுர்கள்! இவர்களுடைய இந்த ஆசையைப்பற்றி எண்ணும் போது, எனக்கு ஒருவிஷயம் கவனத்துக்கு வருகிறது. குழந்தையிருக்கின்ற வீடுகளில், தலைமயிருள்ள குழந்தைகளுக்கு 'கிருஷ்ணன் கொண்டை' போட்டுப் பார்ப்பதுண்டு. அதுபோல, திருப்பதிக்குப்போய் மொட்டையடித்துக்குக் கொண்டுவந்த குழந்தைக்கும் கிருஷ்ணன்கொண்டை போட ஒருவர் விரும்பினுல், அவரைப் பற்றி என்ன நினைப்பார்கள், மக்கள்? ரஷ்யா, ஐந்தாண்டுத்திட்டம் போட்டது! மாளிகைகளிலும் பிரபுக்களிடமும் கிடந்த பணத்தையும், நாட்டின் ஆலைகளையும் வயல்களையும், சர்க்கார் சொத்தாக்கி, பிறகு அவைகளில் முன்னேற்றங்காண, ஐந்தாண்டுத் திட்டம் தீட்டிற்று. ஆனுல், இங்கு! நாட்டின் அடிப்படைத் தொழில்கள் எல்லாம், சர்க்காரிடம் இல்லை—தனிப்பட்ட முதலாளிகள் வசமே இருக்கிறது. இப்படியிருக்கும்போது, நானும் ரஷ்யாவைப்போலச் செய்கிறேன், என்று மொட்டைத்தலைக்கு கிருஷ்ணன் கொண்டைபோடஆசைப் படுகிறது, டில்லி சர்க்கார்!''

இவ்வாறு, குறிப்பிட்டார் பொதுச் செயலாளர்.

அடிப்படைத் தொழில்கள!—இந்திய உபகண்டத்தில், முதலாளிகள் வசமே உள்ளன.

அடிப்படைத் தொழில்கள்!—யாவும், அதிகமாக வடக்கிலேயே உள்ளன.

இதனுல்தான், முதலாளிகள் நிரம்பிய வடக்குக்கே அதிக வசதிகளும் செய்துதரப்படுகின்றன, டில்லியால்!

இதற்கு வக்காலத்தும் வாங்குகிருர், கிருஷ்ணமாச்சாரியார் — முதலாளிகளின் முன்னேடும் பிள்ளை,

இப்படிச் செலவழிக்கப்படும்தொகையில், உழைப்போரும் ஏழைகளும் நிரம்பிய தெற்குக்கு எதுவும் கிடைக்காமற் போகிறதே என்பதுதான், நமது கண்டனத்துக்குக் காரணம்.

இதனை, அன்னுமாஸ்கரனீஸ், நடேசன்போன்ற பார்லிமெண்டு உறுப்பினர்களும், 'மித்திரன்' போன்றவைகளும் ஆதரிக்கின்றன.

இது, நமது, கண்டனத்தில் பொதிந்திருக்கும் உண்மையினை எடுத்துரைக்கிறது.

இந்த உண்மையினை, இங்கிருக்கும் ஆள்வோர், உணரவேண்டும்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது, இத்தனை கோடி ரூபாய் தெற்குக்குத் தரப்படும் என்பது தெளிவாகத் தெரிந்துவிட்டால், அது சம்பந்தமான முன்னேற்றத் திட்டங்களை சென்னையே தீட்டி, ஆக்கவேலைகளைச் செய்யலாம்.

அத்தகைய உறுதிமொழியைப் பெறுமா, காமராஜர் சர்க்கார்?

ஆவடி நடத்தியதிலிருந்து, டில்லி மேலிடத்தில், தென்னாட்டுக் காங்கிரசுக்கு அதிக செல்வாக்கு இருப்பதாகப் பேசப்படுகிறது.

அது உண்மையானால், ஏனிந்த உறுதிமொழியைப் பெறக்கூடாது, ஆள்வோர்.

ரூபாய் 6000 கோடி! அதில், தெற்குக்கு எவ்வளவு பங்கு!!—இது தெரியவேண்டும். அதற்கு பதில், அங்கே ஒரு ஆலை! இங்கே ஒரு அணைக்கட்டு!—என்று இவர்கள் 'காவடி' தூக்குவதும், அதற்கு இவ்வளவு செலவழியும், இதற்கு இவ்வளவு பணம்தேவை—ஆதலால் வேறு திட்டங்களைக் கொடு, என்று டில்லி கேட்பதுமாக இருக்கும் தொல்லைகள் இல்லாமல், "இவ்வளவு பணம் கிடைத்தது— அதைக்கொண்டு இன்னின்ன திட்டங்களைச் செய்தோம்; என்று திருப்திப்படும் நிலை யாவாது, ஏற்படும்!

செய்யுமா, காமராஜர் சர்க்கார்?—என்று கேட்கிறோம். நாட்டின் நலிவைக்காட்டி.

★

# அரசியற் கருத்துக்கள்

**[ அன்று முதல் இன்று வரை ]**

**[பேராசிரியர் இருதயராஜ்]**

அதிகாரத்துக்குக் கீழ்ப்படியும் குணம் மக்களுக்கு காலக்கிரமத்தில் தானாகவே ஏற்பட்டிருக்க வேண்டும், அதற்காக ஒரு ஒப்பந்தம் தேவையில்லை. அப்படியே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருந்ததாகக் கொண்டாலும், எதோ ஒரு காலத்தில், யாரோ சிலர் செய்துகொண்ட ஒப்பந்தம் பின் சந்ததிகளை இக்காலவரைக்கும் எப்படிக் கட்டுப்படுத்த முடியும்? யாரும் தன்னுடைய பின் சந்ததியாருக்கும் சேர்த்து நிரந்தரமாக எக்காலத்துக்கும் அடிமைச் சீட்டு எழுதிக் கொடுக்க முடியாது.

சரித்திர காலத்திலேயே, சமீபத்திலுங்கூட எத்தனையோ புதிய புதிய அரசாங்கங்கள் உண்டாயிருக்கின்றன. அங்கெல்லாம் ஒப்பந்தத்தின் பிறகுதான் அவை ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஆட்சியிலிருப்பவனை விரட்டிவிட்டு புதிதாக ஒருவன் ஆட்சி அமைக்கும்போதும், ஒரு நாட்டைக் கைப்பற்றும்போதும் புதிய அரசு தோன்றுகிறது. அதனால் அரசுக்குக் கீழ்ப்படிவது எந்த ஒரு ஒப்பந்தத்தையும் மக்கள் புனிதமாகக் கருதுவதாலல்ல. பழக்க வழக்கங்களையொட்டியே மக்கள் அரசாங்கத்துக்குக் கீழ்ப்படிகிறார்கள்.

எந்த மனிதனும் சமுதாயத்துக்கு வெளியிலே, அரசு இல்லாத இடத்திலே பிறப்பதில்லை. அவனுடைய சம்மதமின்றியே அவன் ஏதோ ஒரு சமுதாயத்தின் அங்கமாகிறான். மற்றவர்கள் செய்வதைப் போலவே தானும் செய்கிறான். அரசாங்கத்துக்குக் கீழ்ப்படிகிறான். ஒவ்வொருவரும் பிறந்தபின் விரும்பி ஒரு அரசுடன் ஒப்பந்தம் செய்துகொண்டால், அவரவர் விரும்பிய பொழுது அந்த அரசிலிருந்து வெளியேற உரிமையிருக்கும். ஆனால் மக்கள் அவ்வாறு செய்வதில்லை. இதிலிருந்து மக்கள் ஒரு அரசுக்குக் கீழ்ப்படிவது அதைப்பற்றி யோசியாமல் ஆராய்ந்து பார்க்காமல், செய்யும் ஒரு பழக்கமான காரியம்தான் என்றாகிறது. அவ்வாறு கீழ்ப்படிவதால் அவர்களுக்கு லாபம் இருக்கிறது. அதுதான் அவர்கள் கீழ்ப்படிவதற்குக் காரணம். அமைதியும், ஒழுங்கும், சமாதானமும் நிறைந்த சமுதாயத்தில் பயமின்றி பிறருடைய தலையீடின்றி வாழ முடியும் என்று மக்கள் உணருவதால்தான் அதற்கெல்லாம் காரணமான அரசாங்கத்துக்குக் கீழ்ப்படிகிறார்கள். எனவே லாபங்கருதி, அந்த லாபத்தை அடைவதற்கு ஒரு அதிகாரத்துக்கு அடங்கி நடப்பது அவசியம் என்று கண்டு, தங்கள் கடமையைச் செய்ய மக்கள் முன்வருகிறார்கள்.

அரசு அமைத்து, அரசாங்கம் ஏற்படுவது லாபமுடையது என்று மக்கள் உணருவதற்குக் குடும்ப வாழ்க்கையே காரணமாயிருந்திருக்கும். குடும்பத்தில் எண்ணிக்கை பெருகியபோது, சொத்துக்களைக் காப்பாற்றவும் அவைகளைச் சரிவர நிர்வகிக்கவும் நீதி, நியாயம் என்ற கொள்கைகள் புகுத்தப்பட்டிருக்க வேண்டும். அதனால் நீதியின்படி நடப்பது என்பது இயற்கையாக உண்டான மனிதப்பண்பு அல்ல. காலக்கிரமத்தில் மக்கள் தாமாக உண்டாக்கி, மற்றவர்களுக்குக் கற்பித்துக்கொடுத்த ஒரு பண்புதான்.

எனவே ஒப்பந்தத்தினால் ஏற்பட்டதல்ல சமுதாய வாழ்க்கை. வேண்டுமானால், ஒரு சமுதாயம் மற்றொரு சமுதாயத்துடன் சண்டையிட்டு, கொள்ளையடித்த பொருட்களை எப்படித் தங்களுக்குள் பிரித்துக்கொள்ளுவது என்ற பிரச்னை வெற்றிபெற்ற சமுதாயத்திலிருப்பவர்களுக்குள் கிளம்பி, அந்தப் பிரச்னையைத் தீர்த்துவைப்பதற்காக ஏற்பட்டதொரு சாதனமாக அரசாங்கத்தைச் சொல்லலாம். போர்த்தலைவர்கள் அமைத்த பாசறைகளே, கோட்டை கொத்தளங்களே நாளடைவில் நகரங்களாக மாறின. போர்த்தலைவர்களே முதன் முதல் மன்னர்களாக முடிசூட்டிக் கொண்டார்கள். அதிலிருந்துதான் அரசாங்கம் என்பது தோன்றியிருக்கவேண்டும். இவைகளே ஹ்யூம் வெளியிட்ட கருத்துக்கள்.

**பிளன்டஷ்லி**

ஹ்யூம் என்பவரின் கருத்தையொட்டியே ப்ளன்டஷ்லி என்ற அறிஞர் "அரசும் அரசாங்கமும் மக்களுடைய விருப்பு வெறுப்பைப் பொறுத்து நடப்பதென்று ஏற்றுக்கொண்டால் அதனால் அபாயமே நேரிடும். ஒப்பந்தக்கொள்கை இந்த அபாயத்திற்கே அடிகோலுகிறது. இந்தக்கொள்கையை ஏற்றுக்கொண்டால் அரசாங்க ஆணைகளை யாரும் மதிக்கமாட்டார்கள். அதை மீறும் துணிவும் மக்களுக்குஏற்பட்டுவிடும். அதனால் அரசில் சமாதானம் நிலைத்திராது" என்றார்.

உண்மையில், இயற்கை நிலையில் சமுதாய வாழ்வே என்னவென்று தெரியாதவர்கள் ஒன்றுகூடி ஒப்பந்தம் செய்துகொண்டதாக

சரித்திரம் கூறவில்லை. ஆனால் ஒருசில காலமாவது ஓர் சமுதாயத்தில் அல்லது அரசாட்சியின் கீழிருந்து பழக்கப்பட்ட மக்கள் சிலர் ஒன்றுகூடிப் புதிய அரசை ஒப்பந்தத்திற்குப்பின் அமைத்ததற்குசரித்திரத்தில் ஆதாரமிருக்கிறது.

இங்கிலாந்தில் கடைசி ட்யூடர், எலிசபெத் ஆண்ட காலத்திலும், முதலாவது ஸ்டுவர்ட் ஜேம்ஸ் மன்னன் காலத்திலும், அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட மதத்தைத் தழுவாதவர்களையெல்லாம் அரசாங்கம் துன்புறுத்திய பொழுது, அதைத் தாங்க முடியாமல் பலர் தங்கள் தாய் நாடாகிய இங்கிலாந்தை விட்டு, அப்பொழுது தான் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட அமெரிக்க தேசத்தில் போய்க் குடியேறுவதற்காக, வெளியேறினர். அவர்கள் கப்பலிற் சென்றபோதே நடுவழியில் கப்பலிலேயே தங்களுக்குள் எழுத்து மூலமான ஓர் உடன்படிக்கை செய்துகொண்டு, தாங்கள் அதன்பின் ஒன்றுபட்டு தங்களுக்குத் தாங்களே அரசை ஏற்படுத்திக் கொள்வதென்று எழுதி ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

அவர்கள் எல்லோரும் அதற்கு முன் வேறொரு அரசின்கீழ் வாழ்ந்தவர்கள், அதில் அனுபவமும், பழக்கமும் அடைந்தவர்கள். ஆனால் இயற்கை நிலையிலிருந்துகொண்டு சமுதாய வாழ்க்கையைப் பற்றிக் கனவிலும்கண்டு அறியாத மக்கள் இவ்வித ஒப்பந்தம் செய்துகொண்டார்கள்என்பதை நிரூபிக்க முடியாது.

ஆனால் இந்த ஒப்பந்தக் கொள்கை அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் உள்ள உறவைத் தெளிவாக்குகிறது. அரசின் பாதுகாப்பு மக்களுக்கு அவசியம் தேவை, அந்தப் பாதுகாப்பை அளிக்கக்கூடிய பலமுள்ள அரசாக அது இருக்கவேண்டுமானால் மக்களின் தயங்காத கீழ்ப்படிதல் மிகவும் அவசியம். ஆகவே. அரசு, மக்கள் ஆகிய இருசாராருக்கும் உரிமைகளும் அதே சமயத்தில் கடமைகளும் உண்டு, என்ற உண்மையை இந்தக் கொள்கையிலிருந்து அறியலாம்,

பதினெட்டாவது நூற்றாண்டில் அமெரிக்காவிலும் பிரான்சிலும் ஏற்பட்ட புரட்சிகள் ஆங்கிலேயரின் எண்ணங்களை வெகுவாகப் பாதித்தன.

மதக்கொடுமை தாங்கமுடியாமல்—சுதந்தரமாக தங்கள் விருப்பம்போல் வேண்டிய மதத்தைத் தழுவி வாழலாம் என்ற நோக்கத்துடன் இங்கிலாந்திலிருந்து வெளியேறி, அமெரிக்காவில் குடியேறியவர்கள் தான் அக்கால அமெரிக்கர்கள். தாய் நாட்டை விட்டு வந்த பிறகுங்கூட அவர்கள் தாய் நாட்டு அரசாங்கத்துக்கு அடங்கியே இருந்தார்கள். புதிதாக்குடியேறிய நாட்டில், அங்கு இருந்த பூர்விகக் குடிகளான சிவப்பு இந்தியர்களின் தாக்குதல் ஒருபுறம், அமெரிக்காவில் கானடாப் பிரதேசத்தில் குடியிருந்த பிரெஞ்சுக்காரர்களின் தொல்லை மற்றொருபுறம், அவர்களை இங்கிலாந்தின் படை பலத்தையும் பாதுகாப்பையும் உத்தேசித்து தாய் நாட்டுக்கு அடங்கியிருக்கச் செய்தது. நாளடைவில் சிவப்பு இந்தியர்கள், கட்டுப்படுத்தப்பட்டார்கள். பிரெஞ்சுக்கார்கள் ஆங்கிலேயர்களால் தோற்கடிக்கப்பட்டு, கானடா ஆங்கிலேயருக்குச் சொந்தமானது. பிரெஞ்சுக்காரர்களின் தொல்லை தீர்ந்தது.

### உரிமைபெற்றனர்

இதுவரை தாய்நாட்டு அரசாங்கத்துக்குக் கீழ்ப்படிந்துவந்த குடியேற்ற நாட்டு மக்கள் இப்பொழுது அதை விரும்பவில்லை. இதுவரை வாய் பேசாமல் கேட்ட வரியைக் கொடுத்துவந்த அவர்கள் இப்பொழுது நியாயம் பேசத் தொடங்கினர். "எங்களுடைய பிரதிநிதிகள் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் இடம் பெறாதபோது அந்தச் சபையால் விதிக்கப்பட்ட வரியை நாங்கள் ஏன் கொடுக்கவேண்டும்? பிரதிநிதித்துவம் இல்லையென்றால் வரியும் கூடாது" என்று வாதம் புரிந்தனர். இதுவரை தட்டிக்கேட்க ஆளின்றித் தன்னிஷ்டம்போல் வரிகளை விதித்துவந்த பிரிட்டிஷ் அரசாங்கம் எதிர்பாராத இந்த இடத்திலிருந்து வந்த உரிமைக் குரலை மதிக்கவே இல்லை. அதற்கு மாறாக இந்த உரிமைப் பேச்சையே மட்டந்தட்ட ஆரம்பித்தது பலவழிகளில். பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார்கள், அமெரிக்கர்கள். அடக்குமுறை அதிகரித்தது கடைசியில் வெறிகொண்டு எதிர்த்தனர். இறுதியில் வெற்றியும் கண்டனர். அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் தங்களைத் தாமே ஆண்டுகொள்ளும் உரிமையைப் பெற்றன.

அப்பொழுது இங்கிலாந்தில் இரண்டு கட்சிகள் இருந்தன. கடைசி ஸ்டுவர்ட் இரண்டாவது ஜேம்ஸ் மன்னனை 1688-ல் நாட்டை விட்டு ஓடும்படி செய்தவர்கள் 'விக்' கட்சியினர் என்றும் மன்னனுக்கு அனுதாபம் காட்டியவர்கள் "டோரி" கட்சியென்றும் பிரிந்தனர். அதிலிருந்து இங்கிலாந்தில் இரண்டு கட்சிகளும் இயங்கிக் கொண்டு வந்தன.

அமெரிக்கர்களின் சுதந்தரதாகத்தைத் தீர்க்கவேண்டும். அவர்களை அடக்கி ஆளுவது கூடாது. அவர்களும் நம்மவர்கள் தான். நம்மைப் போலவே சுதந்தரத்தை அவர்களும் விரும்புவதில் தவறில்லை என்று கருதியது "விக்" கட்சி. அமெரிக்கர்கள் புரட்சிக்காரர்கள், துரோகிகள், நன்றிகெட்டவர்கள் என்று ஏசியது "டோரி" கட்சி.

பிரான்சில் புரட்சி ஏற்பட்டதைக் கேள்விப்பட்ட நேரத்திலும் இப்படித்தான் பிரிட்டனில் இரண்டுபட்ட கருத்துகள் தோன்றின. புரட்சி துவக்கிய நேரத்தில் "டோரி" கட்சி அதை வன்மையாகக் கண்டித்தது. ஆனால் "விக்" கட்சியைச் சேர்ந்தவர்கள் அதை வாயார வாழ்த்தினார்கள். அந்தக் கட்சியைச் சேர்ந்த பிரமுகர்களில் ஒருவர் "மனிதகுல சரித்திரத்திலேயே மிகச் சிறந்ததொரு நிகழ்ச்சி" என்று பிரஞ்சுப் புரட்சியைப் புகழ்ந்தார். ஆனால் நாளடைவில் புரட்சிக்காரர்கள் கட்டுப்பாடுகளை மீறி மன்னர் குடும்பத்தையே நிர்மூலமாக்கியது போன்ற ரத்த வெறியாட்டச் செயல்களைக் கேட்கக் கேட்க "விக்" கட்சியினரும் கொஞ்சம் கொஞ்சமாக தங்கள் ஆதரவைக் குறைத்துக்கொண்டு கடைசியில் கண்டிக்கத் தொடங்கினார்கள்.

### எட்மண்ட் பர்க் 1729–1797

பிரஞ்சுப் புரட்சியைமேலும் ஆதரிப்பது ஆபத்து என்று எச்சரிக்கை விடுத்தவர்களில் பர்க் என்பவர்தான் முதலானவர். ஆனால் அமெரிக்கப் புரட்சியை ஆதரித்தவர்களில் முதன்மையானவரும் அவர்தான், "குடியேற்ற நாட்டினரின் பிரச்னை நியாயமானதா அல்லவா என்று பார்ப்பதைவிட அவர்கள் கேட்பதை

அதாவது சுதந்தரத்தைக் கொடுத்துவிட்டு அவர்களுடைய நன்மதிப்பைப் பெறுவது நல்லதா அல்லது அவர்கள் கேட்பதைக் கொடுக்க மறுத்துவிட்டு அதற்காக அவர்களுடன் போரிடுவது நல்லதா என்றுதான் ஆராய வேண்டும்.

சுதந்திரம் கேட்க அவர்களுக்கு உரிமையுண்டா என்று ஆராய்வதைவிட எத்தனை நாளைக்கு அவர்களை நாம் கட்டுப்படுத்த முடியும்; அவர்கள் நம்மை மீறிப் போர் தொடுத்தால் நாம் அவர்களைப்போரில் வென்று மேலும் அவர்களை அடக்கி ஆளுவதென்பது சாத்தியமானதா என்பனவைகளை ஆராயவேண்டும். அவர்களை அடக்கிக் கட்டுப்படுத்தி அதனால் அவர்களுடைய மனது புண்படும்படி நடத்துவதற்கு நமக்கு உரிமை இருக்கிறது என்று நிலைநாட்டுவதைவிட அவர்களை அவர்கள் விருப்பம் போல் செய்யவிட்டு மனதைத் திருப்திப்படுத்தி அவர்களுடைய அன்பையும் நல்லெண்ணத்தையும் சம்பாதித்துக்கொள்வது நல்லது" என்ற கருத்தை வெளியிட்டார் பர்க்.

அமெரிக்கருக்கு சுதந்தரம் கேட்க உரிமை இருக்கிறது என்று ஒத்துக்கொண்டதால் இப்படிப் பேசவில்லை அவர். உரிமை இருக்கிறதா இல்லையா என்று வரட்டுவாதம் செய்துகொண்டிருப்பதைவிட எது நடைமுறையில் நன்மை பயக்கக்கூடியது என்று கண்டுபிடித்து, அதன்படி நடப்பதே உசிதமானது. அனுபவத்தை அனுசரித்து, எது நன்மை தரக்கூடியது, எதைச் செய்தால் லாபகரமாயிருக்கும்—இவைகளைத்தான் ஆராயவேண்டுமே யல்லாது வரிவிதிக்க இருக்கும் உரிமையை நிலைநாட்டுவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தால் துன்பமே வந்து சேரும் என்பது அவருடைய கருத்து. (தொடரும்)

குறள் மாநாடு
ஏப்ரல்–24!
வாலாஜாபாத்தில் !!
சிறந்த சொற்பொழிவுகள்,
இன்னிசை, நாடகம், நடைபெறும்.
வாலாஜாபாத் தி. மு. க.

# விதைக்காது

# விளைகின்ற கழனி!

"கறம்பு நிலம்தான். கஷ்டப்பட்டு கழனியாக்கினேன். ஊருணிகூட இல்லை. ஒன்று வெட்டி எடுத்தேன். பணக்காரர் மனம்போல பாதாளத்தில் கிடக்குது தண்ணி. விடுவேனா? கோழி கூவு முன் சென்று, வெயில் உச்சிக்கேறுவதற்குள், நில முழுமைக்கும் நீர் பாய்ச்சிவிடுவேன். கதிர், அதோ, கண்டீர்களா?"

*

ஆனந்தத்துடன் அறிவிக்கிறான், அஞ்சான்; ஏழைக் குடியானவன். கறம்பைக் கழனியாக்கியது, அவன் கைவண்ணம். கதிர் ஆடுகிறது, அதோ; காட்டி மகிழ்கிறான். ஆடுகின்ற கதிரை, அறுத்தெடுத்து, பதர் நீக்கி, அளக்கும்போது உழைப்புக்கேற்ற ஊதியம் உண்டா, என்பது உறுதி கிடையாது, அவனுக்கு. ஆயினும் ஒரு உவகை, அவன் மனத்தில்! கறம்பு, கழனியாயிற்றல்லவா? அதை, அவனல்லவா செய்திருக்கிறான்! அந்த ஆனந்தம்!!—இது, சராசரி, நீங்கள் காணும், குடியானவனின் காட்சி. விதைக்கிறான். அறுக்கிறான். உழைக்கிறான், வாழமுடியாது திண்டாடினும் வாழ்கிறான்.

* * *

இதோ, ஒரு கழனி! விதைக்க வேண்டியதில்லை, வியர்வை சிந்த உழைக்கவேண்டியதில்லை, ஊருணி தேடவேண்டியதில்லை, ஊர்விழிக்கு முன்னரே ஓடி வேலைசெய்யவேண்டுவதுமில்லை. ஆனால், விளைகிறது. விளைவது என்ன, கதிரா? அல்ல, அல்ல. யாவும். ஆம், யாவும் விளைகிறது, அந்தக் கழனியிலே. நெல் வேண்டுமா—நெஞ்சு நெகிழும் பட்டாடையா—பணக்குவியலா—தங்கமா எதுவானாலும், விளைகிறது. இந்தக் கழனியிலிருந்து ஊதியம் பெற, அஞ்சானைப்போல அவதிப்பட வேண்டியதில்லை. கல்லும் முள்ளும் குத்தும் பாதையில், தேளெங்கிருக்குமோ பாம்பு பதுங்கிக் கிடக்குமோ என்று பயந்து நடுங்கிச் செல்ல வேண்டியதில்லை. முப்புரி நூல், தர்ப்பைப்புல்—இது போதும். யாவும் பெறலாம்.

*

விதைக்காது விளையும் கழனி—என்றார், அறிவாளர், ஆரியத்தைக் குறித்து.

உழைக்காது உண்ணும் வர்க்கம்—என்கிறது சுயமரியாதை இயக்கம், ஆரியமதம் நம்பி வாழ்வோரைப் பற்றி.

இந்த உண்மையை எடுத்துரைக்க, நாட்டின் நிகழ்ச்சிகளிலிருந்து, ஏடுகளில் தீட்டப்பட்டிருக்கும் கருத்துக்கோவைகள்வரை எடுத்துச் சொல்லி வருகிறோம்.

இன்று நேற்றல்ல—நீண்ட காலமாக.

இவ்வளவு சொல்லியாயிற்றே என்று அல்ல; அனுதினமும்.

"பாரீர், விதைக்காது விளையும் கழனியை.

மக்களே! அறிவீர், ஆரியம் விளைக்கும் கேடுகளை"

என்று, சுயமரியாதை இயக்க நாள் முதல், தி. மு. கழகமாகிய இன்றுவரை, சொல்லாத நாள் கிடையாது, நாம். ஆரியம் விளைத்த கேடுகள்; அது வாழும் வகை—இவைகளை எடுத்தெடுத்துக்காட்டி வருகிறோம்.

"என்ன சார்; ஆரியம், ஆரியம் என்று எப்போது பார்த்தாலும் பேசிக்கொண்டே இருக்கிறீர்கள். அது என்ன பூதமா, பேயா? சிகப்பா, கருப்பா? நாட்டில் எத்தனையோ பிரச்னைகளில்லையா—இதோ பாருங்கள். அமெரிக்கா, அணுகுண்டைத் தயாரித்துக்கொண்டிருக்கிறது. ஆலையிலே, தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். இவைகளை எடுத்

துச் சொல்லுங்களேன். பிணத்தைச் சோதனை செய்வதுபோல, ஏன் பழைய விஷயத்தையே எப்போதும் கிளறிக்கொண்டிருக்கிறீர்கள்?”

இவ்வண்ணம், ஆரியம்பற்றி நாம் பேசும்போது கேட்கும் அன்பர்கள் தொகை ஏராளம். அவர்கள் நமது கூற்று, பழைய குப்பையைக் கிளறுவதென்று எண்ணுகிறார்கள். அதனால், இப்படி அறவுரை கூற வருகிறார்கள்.

ஆனால், விசித்திரம் என்னவென்றால், மனுமாந்தாதா காலத்தில் ஏற்படுத்தப்பட்டதாகச் சொல்லப்படுகிற ‘சாஸ்திரோக்தமான’ சம்பிரதாயங்கள் யாவும், இன்னும் விட்டுக்கொடுக்கப்படவில்லை. ஆங்கில மொழியை அழகாகப் பேசிக்கொண்டு, அமெரிக்காவுக்கும் லண்டன்மாநகருக்கும் பறந்துகொண்டு, அணுகுண்டை கைவிடுமாறு ஐசனோவருக்கு புத்திமதி கூறுமளவுக்கு, வளர்ந்துள்ள அறிஞர்களே, இன்னும் ‘பழைய சம்பிரதாயங்களுக்கு, இடமளித்து வருகின்றனர்.

“சுதேசமித்திரன்’ தோழர் சி. ஆர். சீனிவாசன், திறமையான ஒரு தின இதழின், ஆசிரியர். இந்திய ரிசர்வ் பாங்கியிலிருந்து நாட்டின் பற்பல பொது இயக்கங்களில் தொடர்பு கொண்டிருப்பவர். அமெரிக்காவுக்கும், அகில உலக நாடுகளுக்கும் அறிவுரை கூறி, தீட்டும் தலையங்கங்கள் தீப்பொறிகள்! சிறு பிரச்னை முதல் பெரிய பிரச்னை வரையிலே, தெளிவாக விமர்சனமும் விளக்கமும் கொடுக்க முன்வருகிறார். அப்படிப்பட்ட விற்பன்னர் வீட்டிலே, என்ன நடக்கிறது? இந்த வாரம்கூட உறவினர் ஒருவரின் குழந்தைக்கு **உபநயனம்** நடைபெற்றதாம். பூணூல்போடுகிற காரியம் — அவருடைய ஏட்டிலே, சின்னாட்களுக்கு முன்பு வெளிவந்த ஒரு புகைப்படம் நினைவிருக்கலாம் தோழர்களுக்கு. வசதியில்லாத பல ஏழைப் பிராமண குழந்தைகளுக்கு, இலவசமாக பூணூல் போடும் சடங்கு நடைபெற்றதாக. இப்பேற்பட்டவர்களே, இதுபோன்ற காரியங்களில், இன்னும் அக்கறையும் அதிசிரத்தையும் காட்டிக்கொண்டு வருகிறார்கள்.

“அதுவே, சாஸ்திர தர்மம்’, என்று வர்ணிக்கும் சங்கராச்சாரிகளும், ஜீயர்களும், இருக்கிறார்கள் ஏராளமாக.

இப்படி இருக்கும்போது, எப்படி நாம், கண்டிக்காமலிருக்க முடியும்?

விதைக்காது விளையும் கழனியாக, ஆரியம் இருப்பது குறித்து, இதோ ஒரு சம்பவம்.

கல்லுடைக்கிறான்! மரம் பிளக்கிறான்!

மூச்சடக்கி, முத்தெடுக்கிறான்!

துப்பாக்கி தூக்குகிறான்! பிணமாகிறான்!

உழைக்கிறான்! வாழ்கிறான்!

இப்படியிருக்கிறது, உலக வாழ்க்கை. ஆனால், இதோ ஒருவருக்கு, அடிக்கிறது அதிர்ஷ்டம்.

அதுவும், திடீரென, அடித்திருக்கிறது, யோகம்.

மணியடித்து, கற்பூர ஆராதனை காட்டி வாழ்ந்துவந்த கோயில் குருக்கள் அவர்.

பஞ்சப் பிராமணன். அர்ச்சனை மூலம், வயிறு கழுவி வந்தவர், அவர்.

**யானைமீது அம்பாரி, அவருக்கு.**

**இனாமாக—இரண்டு யானைகள்!**

**குதிரையொன்றும் தரப்பட்டது.**

**அம்ச தூளிகாமஞ்சம்—அழகாக அலங்கரிக்கப்பட்டது. மஞ்சம்!! அரசர் படுத்துக் கிடந்ததென்றால், சாமான்யமாகவா இருக்கும்? அவ்வளவு உயர்தரமானது!**

**கட்டிலுக்கு, மெத்தைகள் திண்டுகள்!!**

**வைரமணிகள்! தங்க நகைகள்!!**

இத்தனையும், கிடைத்திருக்கிறது.

**ரூபாய் இரண்டு லட்சம் பெறுமாம்!**

**அரசர் பிடித்த, சிகிரெட் குழாய் கூடக் கொடுக்கப்பட்டதாம்!!**

அவ்வளவையும் வழங்கி, ரொக்கமாக ரூபாய் பத்தாயிரமும், கொடுத்திருக்கிறார்கள், நேபாளத்தில்!

இவ்வளவும் எதற்கு? சேனையிலிருந்து செயற்கரிய சேவையைச் செய்தார் என்பதற்காகவோ, அஷ்டமாசித்துக்களிலும் கைதேர்ந்தவர் என்பதற்காகவோ, அரசர் பிரானுக்கு மெய்க்காப்பாளராக இருந்து ஊழியம் செய்தார் என்பதற்காகவோ அல்ல; ஒரு பிராம்மணர், என்பதற்காக!

**ஆமாம்! அவர் ஒரு பிராம்மணர் என்பதற்காக!!**

இறந்துபோன நேபாள மன்னருக்காக, ஈமக்கடன் கழிக்கப்பட்டபோது, இவ்வளவும் அளிக்கப்பட்டதாம்.

இறந்து போனவர்களுடைய ஆவி, மேலோகம் செல்லாமல், பூலோகத்தில் தான் அனுபவித்த பொருள்களைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருக்கும் என்றும் அதனால் அந்தப் பொருள்களை ஒரு அய்யருக்குத் தானம் கொடுத்துவிட்டால், ஆவி, மேலோகம் செல்லுமென்பது சாஸ்திரமாம்.

கோதானம், தருகிறோமல்லவா,

---

## காஞ்சி தி. மு. க.

காஞ்சி நகர தி. மு. க.வுக்கு தோழர் டி. சபாபதி செயலாளராகவும், தோழர் எம். வடிவேலு துணை செயலாளராகவும், தோழர் வெ. சம்பந்தம் பொருளாளராகவும், போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டு, கீழ்க்கண்ட 18 பேர் கமிட்டி உறுப்பினர்களென தேர்தல்மூலம் தெரிந்தெடுக்கப்பட்டனர்:— காஞ்சி கலியாணசுந்தரம், சி. வி. எம். அண்ணாமலை, செ. சடையாண்டி, வி. என். மார்க்கு, கே. டி. எஸ் மணி, இ. எத்துராசு, கா. வெ. முருகேசன், கே. வி. பாலகிருட்டிணன், இரா. வெங்கடேசன், வா. வேலு, எஸ். முருகேசன், ந. கச்சபாலையம், கே. கண்ணன், மா. நாராயணசாமி, வெ. ராசு, டி. டி. கிருட்டினன்; இ. குமாரசாமி, கே. கோவிந்தராசு.

**செங்கற்பட்டு மாவட்ட தி.மு.க. பிரதிநிதி**

# தேர்தல் அறிக்கை.

1. தேர்தல் 3—4—55 ஞாயிறு மாலை 4-மணிக்கு திராவிடநாடு நிலையத்தில் நடைபெறும்.

2, மாவட்டப் பிரதிநிதியாக நிற்க விரும்புகின்றவர்கள் 1–4–55 தேதி மாலை 6-மணிக்குள் காஞ்சி நகர தி. மு. க. செயலாளரிடம் மனுச்செய்துகொள்ள வேண்டும்.

3. காஞ்சி தி. மு. க. பொது உறுப்பினர் முதல் அனைவரும் போட்டியிடலாம்.

4. மாவட்டப் பிரதிநிதியாக காஞ்சி நகரக் குழு ஆறு நபர்களை தேர்ந்தெடுக்கும்,

D. சபாபதி,
நகர தி. மு. க. செயலாளர் காஞ்சி

நெருப்பாற்றைக் கடந்து மயிரிழைப் பாலத்தின்மீது இறந்தோரின் ஆவி செல்வதற்காக! அது போலத்தான் இதுவும்!!

மன்னருடைய 'பாபச்சுமை'களை, நரதேவி கோயில் குருக்களான கிருஷ்ணபட்டர், ஏற்றுக்கொண்டு, இத்தனைப் பொருள்களையும் பெற்றுக்கொண்டிருக்கிறார்.

இனி, அந்தப்பிராம்மணர், நேபாளத்துக்குத் திரும்பக் கூடாதாம்! அதனால், யானைமீதேறி, நாட்டை விட்டுக் கடந்துசென்ற அவரைக் கல்லாலடித்து விரட்டினராம்! பாபச்சுமைகளைத் தாங்கிக்கொண்டிருக்கிறாரல்லவா? அதற்காகவே, கல்லடி.

பட்டர், அதற்கெல்லாம் கவலைப் படவில்லை. 'ஜாம், ஜாம்' என்று குதிரை முன்னே செல்ல, கொட்டு முழக்கு நடக்க, அதிகாரிகள் இரு பக்கமும் அணிவகுத்து நிற்க, யானைமீது அமர்ந்தபடி சென்றிருக்கிறார்.

மன்னருடைய ஆவி அலையக் கூடாதே என்பதற்காக, அவருடைய சகல சம்பத்துக்களும், பட்டருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

சிகிரெட் குழாய் முதல், கட்டில் மெத்தைவரை — பெற்றவண்ணம் சென்றிருக்கிறார், பட்டர்.

நேபாள நாட்டில், மறைந்த மன்னருக்காக, இரத்தத்தையும் வியர்வையையும் சிந்தியவண்ணம் இருக்கும் மக்கள், பல்லாயிரக் கணக்கானோர்.

அவர்களுக்குக் கிடைக்கவில்லை, இந்தப் பாக்கியம்.

ஆனால், ஒரு அய்யருக்குக் கிடைக்கிறது, சுலபமாக.

ஏனெனில், அவர் ஒரு வேதியர். பிரம்மாவின் முகத்தில் பிறந்தவர். அவர்களே, இப்படிப்பட்ட காரியங்களுக்கு அருகதையுடையவர்கள். அதன் சின்னம்தான், முப்புரிநூல் வேதபாராயணம்!

நேபாள மன்னர் திருபுவனர் இறந்தபின்பு, அவருடைய ஆத்மா சாந்தியடைவதற்காக, ஒரு பட்டர் பெறுகிறார், பாக்கியம். அப்படிச் செய்யாவிட்டால், இங்கிருக்கிற தேவாதிதேவர்களுக்கும் மூவாதி கடவுளருக்கும், கோபம் வருமாம்— சாஸ்திரங்களை அவமதித்த பாபம் நேருமாம்; சண்டாளர்கள் ஆக நேருமாம்; அதற்காக இவ்வளவும்!

ஆனால், அதே மன்னர் ஆண்டுகள் பலவாக, இருதயநோயால் அவதிப்பட்டுக் கிடந்தபோது இந்த சாஸ்திரங்கள் முன்வரவில்லை காப்பாற்ற—பட்டர் பரம்பரை, இஷ்ட தெய்வங்களை நாடி, அனுக்ரகம் பெற்றுத்தரவில்லை—முப்பத்து முக்கோடி தேவர்கள், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷீசுவரர்கள் எல்லாரும் இருந்தாலும் மன்னர் திருபுவனர் தன்னுடைய இருதயநோய் சிகிச்சைக்காக, ஸ்விட்சர்லாந்துக்குச் சென்றாரேயொழிய, பட்டர் காப்பாற்றிவிடுவார் — பகவான் அருள்புரிந்துவிடுவார் — என்று நம்பவில்லை.

அவர், ஸ்விட்சர்லாந்துக்கு விமானமேறிச் சென்றபோது, வழியனுப்பிய அதே மந்திரிப் பிரதானியர்தாம் இன்று அவர் ஆத்மா 'சாந்தி' யடையவும், பட்டருக்குத் தானமளித்து சாஸ்திர சம்பிரதாயங்களைக் கடைப்பிடித்திருக்கின்றனர்.

விஞ்ஞானம், பழைமைப் பாசம்—இரண்டுக்குமிடையே, இந்து மதத்தைக் காப்பாற்ற விரும்புகின்றனர், இந்தச் சிலர்கள்.

இடையில், எப்போதும்போல, ஒய்யார வாழ்வு கிடைக்கிறது, உழைக்காமல் உண்ணும் வர்க்கத்துக்கு.

விதைக்காது விளையும் கழனி!—பலன் பெறும் விசித்திரத்தைப் பாருங்கள்.

ஒரு சாதாரண பிராம்மணர். அவருக்கு, அடிக்கிறது யோகம்.

ஒரு அரசின் சொந்தப் பொருள்களே, போகின்றன, அவர் வீட்டுக்கு.

நல்லவேளை! பட்டர், அரசர் அனுபவித்த பொருள்களையெல்லாம் பெற்றுக்கொண்ட பிறகு, "மக்களே! அரசனின் பூதவுடல் இந்தச் சொத்துக்களை மட்டுமா அனுபவித்தது. இவ்வளவு பெரிய அரண்மனை—இந்த நேபாள அரசு—ராணியார்—எல்லாரையும் தான் அனுபவித்தது. ஆகவே, அவருடைய ஆவி, இவைகளைச் சுற்றியும் வட்டமிட்டுக் கொண்டுதானிருக்கும். ஆகவே, அவைகளையும் கொடுங்கள்!" என்று கேட்டிருந்தால் என்ன செய்திருப்பார்கள்!!

சிக்கலான கேள்விதான்—ஆனால் அப்படிப்பட்ட சிக்கல்களான கேள்விகளை எங்கே கிளப்புகிறார்கள்,

கிளப்பினால், தமது சாயம் வெளுக்கும் என்பது — சனாதனிகளுக்கும் தெரியும். அதனால், அவர்கள் வந்தவரைக்கும் லாபம் என்று இருக்கிறார்கள்.

நமது முத்தண்ணாக்களோ, அவர்கள் சொல்லுவதை நம்பிக்கொண்டு ஆடுகிறார்கள்—அப்படி ஆடுவது தவறென்று சொல்லும் நம்மீதும் சீறுகிறார்கள்!

யோகம் அடித்துக்கொண்டேயிருக்கிறது, விளைக்காது விளையும் கழனியினருக்கு.

★


# காஞ்சி கலை விழா

**1-4-55**
எம். ஜி. ராமசந்திரன் குழுவினரின்
**ஆசை நினைவு**

★

**2-4-55**
எம். ஜி. ராமசந்திரன் குழுவினரின்
**பகைவனின் காதலி**

★

**3-4-55**
தியாகராய கல்லூரிக் குழு
**மணிநாட்டுக் கூனன்**

★

**4-4-55**
தியாகராய கல்லூரிக் குழு
**எதிர்பார்த்தது**

★

**5-4-55**
என். எஸ். கிருஷ்ணன்-மதுரம்
குழுவினர்
**தளபதி**

★

டி. சண்முகம் எம். எல். ஏ., எஸ். தெய்வசிகாமணி எம். எல். ஏ., ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., ஈ. வி. கே. சம்பத், அண்ணாதுரை ஆகியோர் தலைமையில் முறையே நடைபெறும்.

**கலை விருந்து! சீரிய பணிக்காக!!**

**வருக! வருக!!**

திராவிடநாடு

காஞ்சி] 3—4—55 [ஞாயிறு

# காரணம், இதுதான்!

2240000000 ரூபாய்கள்!

ஆண்டுதோறும், விடாமல் செலவழிக்கப்பட்டு வருகிறது! நம்மையாளும், டில்லிதான், செய்கிறது இவ்விதம்!!

ஏழை இந்தியா—எல்லோருக்கும் வேலைதேடித் தருவதென்றால். ஏது பணம்—நேசவாளர் தொல்லையா, ரூ. 5—கோடிதான் உதவமுடியும்—ஆலைகள் அமைப்பதென்றால் பணம் வேண்டாமா—என்று பல்லவி பாடுவோர்தான், இத்தனை கோடி ரூபாய்களை இன்னும் செலவழித்துக் கொண்டுள்ளனர்.

இந்த ஆண்டில் மட்டுமல்ல; ஏழாண்டுகளாக! ஆண்டுதோறும், 200 கோடிக்கு மேற்பட்ட ரூபாய்கள்!!

இந்திய உபகண்டத்தின் மக்கள் தொகையான, **30** கோடிபேருக்கும் இந்த 224 கோடியையும் பங்கிட்டால் ஒவ்வொருவருக்கும் கிட்டத்தட்ட எட்டு ரூபாய்களைத் தரலாம்! ஆனால், இந்தத்தொகை முழுதும் 3¾ லட்சம் பேருக்காக ஆண்டுதோறும் செலவழிக்கப்படுகிறது!! 224 கோடி ரூபாய், இந்திய உபகண்டத்தின் வருமானத்தில், பாதி தொகை.

மிஞ்சும் பாதியைக்கொண்டு தான், சகல காரியங்களும் செய்யப்படுகிறது,

இப்படி, கோடானு கோடி ரூபாய்களை ஏன் செலவழிக்க வேண்டும் என்று கேட்காத நல்லோர் கிடையாது! எனினும், அதில், குறைவு செய்யவில்லை!! ஆண்டு தோறும், படியளக்கப் பட்டுக்கொண்டேயிருக்கிறது, டில்லியால்,

உலக விடுதலை இயக்கங்களைப் போலன்றி, 'கத்தியின்றி, ரத்தமின்றி, யுத்தம் ஒன்று' செய்து இந்தியாவுக்குச் சுயராஜ்யம் கொண்டுவந்த பெருமை தங்களுக்கே உண்டு என்று சுதந்திரத் தலைவர்கள் கூறிக்கொள்ளத் தயங்குவதில்லை.

அவர்களாட்சியில்தான் 'கத்தி தூக்கி, ரத்தம் சிந்தி, யுத்தம் ஒன்று செய்வதற்காக' இத்தனை கோடி ரூபாய்கள், ஆண்டு தோறும் செலவழிக்கப்படுகிது.

இராணுவச் செலவாம்! இராணுவத்திலிருக்கும் 3¾ லட்சம் பேருக்கும், தளவாடங்களுக்கும், இத்தனை கோடி ரூபாய்கள்.

அரசாங்கமுத்திரையிலிருப்பதோ அசோக சக்கரம்! கலிங்கம் சிந்திய இரத்தக்கண்ணீரைக் கண்டு, இனிக்கனவிலும் போரிடக் கிளம்பேன் என்று சூளுரைத்து 'புத்தம்' ஏற்ற, அசோக மன்னனின், சக்கரம். ஆனால், செலவுசெய்வதோ, ராணுவப் படைக்கு!!

"இப்படிச் செலவு செய்வதால், நமக்குப் போர்வெறி இருக்கிறது என்று யாரும் கருதமுடியாது. அணுகுண்டு முதலிய நாச ஆயுதங்களைச் செய்யும் எண்ணமும், நமக்கு இல்லை. ஆனாலும், இவ்வளவு தொகையைச் செலவழிப்பது நம்முடைய தற்காப்புக்காகத்தான்"

என்று டில்லியில், புதிதாகப் போய்ச் சேர்ந்திருக்கும் பாதுகாப்பு மந்திரி பண்டிதபந்த், வெளியிட்டிருக்கிறார். பாதுகாப்புக்காக! 224 கோடி ரூபாய்கள்!

இவ்வளவு தொகை, இந்த ஏழாண்டுக் காலமாக செலவழிக்கப்பட்டும், பாதுகாப்புக்காக 'டில்லி' செய்திருக்கும் ஏற்பாடுகள் என்னென்ன தெரியுமா—

**விமானப்படை சரியில்லை.**

**கப்பற்படையும் வேண்டிய அளவு கிடையாது.**

**'டாங்கி'கள் பழசாகிவிட்டன.**

**குண்டுகளும், பீரங்கிகளும் வெளிநாட்டிலிருந்துதான் வரவேண்டும்.**

**ராணுவப் பயிற்சிக்கும் அன்னிய உதவி தேவைப்படுகிறது.**

**முப்பது கோடி மக்களில் 3¾ லட்சம் பேர்தான் படையில்,**

இதனையும், பண்டிதபந்தே வெளியிட்டிருக்கிறார். அதுமட்டுமல்ல, வெளிநாடுகள் விஞ்ஞானத் துறையில் முன்னேறி வேகவேகமாகப் புது ஆயுதங்களைச் செய்து கொண்டு போகும்போது, இந்தியாவின் நிலை எப்போதும்போலவே இருப்பதாகவும் குறைபட்டுக் கொண்டிருக்கிறார்.

இந்த இலட்சணத்தில், ஆண்டு தோறும், இவ்வளவு தொகையை ஏன் செலவழிக்கவேண்டும்? போர் நோக்கம் இல்லாதபொழுது, வரிப் பணம் ஏன் கரியாகவேண்டும்?

நாட்டின் பாதுகாப்புக்காக தேவையாம்— நல்ல பதில்! நாடு பாதுகாப்பாக இருக்கவேண்டியது தான். ஆனால், நாட்டுக்கு ஆபத்து எங்கிருந்து வந்து மோதிக்கொண்டிருக்கிறது என்பது ஒருபுறமிருக்க இந்தப் பாதுகாப்பை, இந்தப் படைகளைக்கொண்டே பெற்றுவிட முடியுமா என்பது சிந்தனைக்குரிய விஷயமாகும்.

கரூர் கந்தன், பட்டாளத்தில் சேர்ந்திருக்கிறான்—'லீவில்' வரும் அவனைக் கேளுங்கள் — அல்லது, வீட்டிலிருக்கும் அவன் தாய் தந்தையைக் கேட்டுப் பாருங்கள், "பையன் ஏன் பட்டாளத்தில் சேர்ந்தான்?" என்று. நாட்டுப் பாது காப்புக்காக என் மகனை அனுப்பியிருக்கிறேன்—! என்று சொல்லமாட்டார்கள், அத்தாய். அது, புறநானூற்றில். இப்போதிருக்கும் பல தாய்மார்கள், தங்கள் மக்களை பட்டாளத்துக்கு அனுப்புவதே, 'ஏதாவது பணம் சம்பாதித்துக்கொண்டு வரமாட்டானா?' என்கிற ஆசையால்தான்.

இந்தக் காரணத்தால்தான் சடந்த உலகப்போரின்போது, பட்டாளத்தில் சேர்ந்தோருக்கெல்லாம் நிறையச் சம்பளம் தரப்பட்டது. கை நிறையப் பணம் வாங்கலாம் என்கிற ஆசையில், பலர், ஓடி ஓடிச் சேர்ந்தனர், இராணுவத்தில்.

"இந்திய சர்க்கார், தன்னிடமிருக்கும் பட்டாளத்தைப்பற்றிப் பெருமையாகச் சொல்லிக்கொள்ளுகிறது. அந்தப் பட்டாளம், தாய் நாட்டை மீட்கப் புறப்பட்ட எழுச்சி மிக்க வீரர்கள் கூட்டம் அல்ல; கூலிப்பட்டாளம்! சம்பளம்பெறும் பட்டாளம்"

என்று, அப்போது அமெரிக்காவுக்கு சுயராஜ்யத் தூது சென்ற அம்மை விஜயலட்சுமி பண்டிட்கூட வர்ணித்தார்கள். ஆங்கிலேயனைச் சாடிய நேரம் அது. இன்று, அதே ஆங்கிலேயப் பூமியை அம்மை நாடிக் கிடக்கும் நேரம் இது. தாய்நாட்டை விடுவிக்கும் விடுதலைப் பட்டாளம் இல்லை—இன்றும். அப்படிப்பட்ட 'விடுதலை வீரர்கள்' என்று சொல்லப்பட்டோர், கவர்னர்களாகவும், மந்திரிகளாகவும், அரசியல் தூதர்களாகவும், சட்டசபை மெம்பர்களாகவும் இருக்கிருர்கள். ஆனுல், இராணுவத்தில் எப்போதும்போல 'கூலிப்பட்டாளம்' தான் இருக்கிறது.

குமரிமுனையிலிருந்து காஷ்மீர்க் கோடிவரை சென்று கிடக்கும் கந்தப்பனுக்கு, முதல் ஆசை—சம்பளம்தான். பிறகுதான், யாவும். உண்மை, இது. இதனுல், போர் வீரர்களின் திறமையையும், தியாகத்தையும் குறைகூறவில்லை, நாம். ஆனுல், நிலைமை இதுதான்.

இப்படிப்பட்ட படைகளைக் கொண்டுமட்டுமா, ஒரு நாட்டுக்குப் பாதுகாப்பைக் கொண்டுவர முடியும்? இதோ, விடுதலைபெற்ற சீனுவைப் பார்க்கிறோம். விடுதலைபெற அனுதினமும் போராடிக்கொண்டிருக்கும் இந்தோசீனுவைக் காண்கிறோம். சியாங்கேஷேக்கை எதிர்த்து செந்நீர் சிந்திய சீனப் படைகளுக்கு, 'சம்பளம்' இலட்சியமாயிருக்கவில்லை—தாயக விடுதலை, தாயக விடுதலை எனும் தாரகமந்திரம், இதய முழக்கமாய் இருந்தது. இந்தோசீனுவில், போராடும் விடுதலைப் படைகளுக்கும், 'நாடு விடுதலை பெறவேண்டும்' என்கிற நாடித் துடிப்பே முக்கியமாய் இருக்கிறது. இப்படிப்பட்ட இதயத் துடிப்புதான், வீரர்களுக்குத் தேவை. அத்தகைய வீரர்கள், சம்பளம் கொடுத்து என்றல்ல, சாதாரண மக்கள் மன்றத்திலிருந்து கூடக் கிடைப்பார்கள்.

ஆனுல், டில்லிக்கு, மக்கள் மன்றத்தை பூரணமாக நம்பும் தைரியம் ஏற்படவில்லை. ஏனென்ருல், மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் யாவையும் தீர்க்காமல், பசியும் பஞ்சமும் இல்லாமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் கொட்டமடிக்க அனுமதித்துள்ளன. பெருஞ்சோற்றுதியன் சேரலாதன் என்பான், 'புராணம்' கூறும் பாரதப் போரின் போது இருதரத்துப் படைகளுக்கும் இங்கிருந்து இனமாக சாப்பாடு அளித்தானும்! அப்படிப்பட்ட அரசு ஒன்றுக்கு ஆபத்து என்ருல் மக்களே வீரர்களாவர்—கண் வீச்சே கனலைக் கக்கும்—கையே துப்பாக்கியாகும். சுதந்திர சர்க்கார், மக்கள் மன்றத்தைச் சோலையாக்கவில்லை; பாலையாக்கி வருகிறது. ஆகவே, மருள்கிறது!

கல்லூரிகள் மூலமும், தனி முயற்சிகள் மூலமும் பிரதேசசேனை எனும் பெயரால் பலருக்குப் பயிற்சி கொடுத்து, வேண்டும்போது அவர்களை அழைத்துக் கொள்ளலாம்—என்றெரு திட்டமும் இருக்கிறது, டில்லியிடம். அமுல், நடத்தப்படும் வருகிறது. அதனை, திறம்படச் செய்தாலே, போதும்! ஆபத்து வரும் சமயத்தில், அனைவரையும் அழைத்துக்கொள்ளலாம். தாய் நாட்டைக் காக்கும் ஆசையில், வீட்டுக்கொரு பிள்ளைகள், வீராவேசமாக முன்வருவர்! விவசாயியும் வீரனுவான்! தொழிலாளியும், சுடர்முகம் தூக்குவான்!

நிலைமை அதுவா? இல்லையே! ஏழை விவசாயியும், படித்து அலைவோனும், தன்னைத் தினசரி கடித்துத் துரத்தும் வறுமையை எதிர்க்கவே முடியாமல் திண்டாடித் தெருவில் நிற்கின்ருன். அவன் இதயத்தில் வீரத்துக்கும், தாய் நாட்டைப் பாதுகாக்கும் ஆசைக்கும், இடம் எங்கே இருக்கிறது? ரஷ்ய நாடு, போனயுத்தத்தின் போது, தயாரில்லாத நிலையில் இருந்ததாம்—ஆனுல் ஹிட்லரின் படைகள், மாஸ்கோவை நோக்கி விட்டன எனும் செய்தி பரவியதும், தேவைகளைக் குறைத்துக் கொண்டு, விரோதியை வீழ்த்த முரசொலி முழக்கினவாம். கொதிக்கும் கும்பி குளிர்ச்சி அடையும் பிரச்னைகளை முதலில் தீர்த்துவிட்டால், பிறகு எந்தநேரத்திலும், மக்களை வீரர்களாக்க முடியும்! தினசரி ஒருமணி, இரண்டுமணி நேரம் என்று பயிற்சிகொடுத்து வந்தாலேபோதும்— திடீரெனப் போர் மூண்டாலும், திரண்டெழுவர் மக்கள்; அவர்களுக்கான ஆயுதங்களையும், வெடிமருந்துக் கிடங்குகளையும் மட்டும் அரசு தயாரிக்கும் அனுபவசாலிகளைப் பயிற்றுவித்தும் பாதுகாத்தால் போதும். அதைவிட்டுவிட்டு ஆண்டுதோறும், ராணுவத்துக்கென பலரைச் சேர்த்துவைத்துக் கொண்டு, அதற்காக நாட்டின் வருமானத்தில் பாதித் தொகையை, டில்லி, செலவழிப்பது மன்னிக்க முடியாத காரியமாகும்.

பாதுகாப்பு!—எனும் பெயரால் இவர்கள் பசப்புவது, எங்காவது மக்கள் தமது ஆட்சியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்யத் துவங்கினுல், 'இதோ இருக்கிறது பார், ராணுவம்!', என்று அவர்களை மிரட்டவேயொழிய. வேறு எதற்காகவுமல்ல. அந்த அவசியம், டில்லிக்குமிகமிகத் தேவையாக இருக்கிறது. ஏனென்ருல், நாளையதினம், ஏதாவது ஒரு ராஜ்யம், 'கவர்னரை'ப்பூட்டி டில்லியை எதிர்த்துத் தோள்தட்டுகிறதென்ருல், உடனே ராணுவத்தை அனுப்பி, அதனைப் பணியவைக்கலாம். சுதந்திரம் பெற்ற பிறகு, அப்படியொரு சம்பவம், ஐதராபாத் சிற்றரசுக்கு ஏற்பட்டது, கவனமிருக்கலாம் பலருக்கு! வெள்ளையன் தன்னுடைய ஆதிக்கத்தை நிலைநாட்ட, கொள்ளைச் சம்பளம் கொடுத்து, இங்கே ராணுவத்தை வைத்திருந்தான். இந்த மஞ்சள் நிறக் கொள்ளையரும், தமது ஆதிக்கப்பிடிப்புக்காகவே இப்படியொரு ராணுவத்தை வைத்துக் கொண்டு இருக்கின்றனர். இதற்காக, நாடுகள் செலுத்தும் வரிக் காணிக்கையில், பாதியைச் செலவழிக்கின்றனர். மது அருந்தும் சலுகை முதல் சகல வசதிகளையும் அளிக்கின்றனர். இப்படி ராணுவத்தை நம்பி உயிர் வாழும் ஆசை காந்தியடிகள் போன்ற கர்ம வீரர்களுக்கு இல்லாததால்தான் 'அஹிம்சையே, ஆயுதம்!' என்றனர். ஆனுல், அவரது சீடகோடிகளுக்கு, ராணுவத்தையே நம்பிவாழும் நெருக்கடி ஏற்பட்டு விட்டது! ஏனெனில், காந்தியடிகளுக்கு, 'அரசாசன' ஆசை இல்லை. இவர்களுக்கு, அதுதான், வாழ்க்கை இலட்சியம்! அதனுல்தான் பண்டிதர் சர்க்கார், பாமரருக்கு அருள் பரிபாலிப்பதாகக் கூறும் அரசு, ஆண்டுதோறும் ரூ 224 கோடியைச் செலவு பண்ணுகிறது. நல்லோர் கண்டித்தாலும், பொருட்படுத்தாமல்விரயம் செய்கிறது.

★

# அவர்களின் பெருமூச்சு

"பம்பாயிலும், இதர இடங்களிலுமுள்ள தனவந்தர்கள், காங்கிரஸ் தேர்தல் பிரசாரத்திற்கு பண உதவி அளித்தார்கள். ஆனால், ஐக்கிய காங்கிரஸ் கட்சி வெற்றிக்குத் தாங்கள் தான் ஜவாப்தாரி என்றும், மந்திரி சபையை உருவாக்கும் பணியைத் தங்களிடம் விட்டுவிட வேண்டுமென்றும், உரிமை கொண்டாடுவதை ஏன்னால் புரிந்துகொள்ள முடியவில்லை"

*

அகிலம் புகழும் ஆந்திரத் தேர்தலுக்குப்பின், ஆந்திரகேசரி பிரகாசம் அவர்கள் வெளியிட்டுள்ள 'பெருமூச்சு' இது.

பிரகாசத்தால், குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட்டு, கடந்த பொதுத் தேர்தலுக்குமுன், 'ஊழல் நிரம்பியவர்' என்று வர்ணிக்கப்பட்ட கோபால ரெட்டி, ஆந்திர முதலமைச்சர் ஆகியுள்ளார்.

அவரை முதலமைச்சராக்குவதற்காக, அகில இந்திய காங்கிரஸ் தலைவர், தேபர், லால்பகதூர் சாஸ்திரி, பம்பாய் காங்கிரஸ் தலைவர் எஸ். கே. பட்டீல் ஆகியோர், ஆந்திரத்தில் 'முகாம்' அமைத்து, மந்திரிசபையை உண்டாக்கினராம்.

இவர்களின் தலையீடு குறித்தே, பிரகாசம் மேற்கண்ட அறிக்கையை விடுத்துள்ளார், "ஆந்திர மக்களுக்கு தங்களுடைய தலை எழுத்தை நிர்ணயம் செய்துகொள்ளத் தெரியும். இதில், அன்னியர் தலையீட்டை, ஆந்திர மக்கள் விரும்பவில்லை" என்றும் அறிவித்திருக்கிறார்.

உண்மையில், ஆந்திரத்தின் சரிதம் எழுதப்படும்பொழுது, பிரகாசத்துக்கென்று தனியிடம் அளிப்பர், சரிதாசிரியர்கள். அவ்வளவுதூரம் பணியாற்றி இருப்பவர்.

அவர், சிந்தை நொந்து செப்புகிறார்—வெளியார் தலையிட்டார்களாம், மந்திரி சபை அமைப்பில்.

அப்படித் தலையிட்டது, மன்னிக்க முடியாததாகும் என்று மார் தட்டுகிறார்.

வெளியார் என்று அவர் குறிப்பிடுவது, 'வடக்கிலிருந்து' வந்தவர்களைப் பற்றித்தான்.

அவர்கள் தலையீடு பிடிக்கவில்லை, பிரகாசத்துக்கு; பெருமூச்சுவிடுகிறார்.

வடக்கு, ஒவ்வொரு மாகாணத்திலும் தனக்கேற்ற 'தலையாட்டிப் பொம்மை'களை வைத்திருப்பதில், எப்போதுமே அதிகக் கவனம் செலுத்தி வருகிறது.

ஆந்திர மந்திரிசபை அமைப்பில் இந்த நிலை.

இதோ, கேரளத்திலும் ஒரு 'பெருமூச்சு' கேட்கிறது.

மந்திரியாக இருந்து கவிழ்ந்து போன பட்டம் தாணு, வெளியிடுகிறார்.

அவருடைய பிரஜாகட்சி அரசாங்கம் நடக்கும்போது, தமிழர் தலைவர்களுக்கேற்பட்ட சங்கடங்களை, நாடு அறியும்.

தாய் தமிழகத்துடன், சில பகுதிகளை இணைக்கவேண்டுமென்பதற்காக தமிழர் தலைவர்கள் அறப்போர் துவக்கியதும், பட்டம் சர்க்கார் கழுகுபோலக் கொத்தியதையும் நாடு அறியும்.

அவ்வளவு அட்டகாசங்களுக்கும் பட்டம் தாணுவே காரணம் என்று நாம் எண்ணியிருந்தோம். திருவாங்கூர் சட்டசபையில் பெருமூச்சுவிட்ட வண்ணம் சொல்லுகிறார், "தமிழர்கள் எனக்கு எதிரிகளல்ல; தமிழர் தலைவர்கள்மீது போடப்பட்ட வழக்குகளை வாபஸ் வாங்கிவிடலாம் என்று நான் எண்ணினேன். ஆனால், பண்டித நேரு தலையிட்டு, அப்படிச் செய்யக்கூடாதென்று தடுத்தார்" என்பதாக வெளியிட்டிருக்கிறார்.

தமிழர்கள் நடத்திய அறப்போரை நசுக்குவதில், அவ்வளவு ஆத்திரம் காட்டியிருக்கிறார், பண்டித நேரு.

இலட்சணம், இது.

ஆனால், "நிர்வாக விஷயங்களில், எப்போதும் மத்திய சர்க்கார் தலையிடாது" என்பதாக வாய் வீச்சு.

பிரகாசம்—மந்திரிசபை அமைக்கவே 'டில்லி' வந்ததாகச் சொல்லி, ஆத்திரப்படுகிறார்.

பட்டம்—தமிழர்களை அடக்க, பண்டிதர், தனக்கு தாக்கீது பிறப்பித்ததாகச் சொல்லுகிறார்.

பிரகாசமும், பட்டமும்–நீண்டநாள் காங்கிரசிலே இருந்தவர்கள். பிரகாசம், இன்னும் இருப்பவர். இருவரும், 'பெருமூச்சு'விடுகிறார்கள்–இப்படித் தலையிடுகிறதே வடக்கு என்பதாக.

ஆந்திரம், கேரளம்—இரண்டு முனைகளிலும், இப்படி.

இதோ, தமிழகத்திலும், ஒரு பெருமூச்சு கிளம்புகிறது—நமது நிதியமைச்சர் சுப்ரமணியத்திடமிருந்து—"சர்க்கார் பரீட்சைக்கு கட்டாயம் இந்தியே இருக்கவேண்டுமென்று மத்ய சர்க்கார் சொன்னால், சென்னை சர்க்கார் தலையிடத் தயங்காது" என்பதாக.

இந்தப் 'பெருமூச்சு'கள், காட்டும் பொருள் என்ன — தென்னாட்டின் அரசு, அரசாங்க அலுவல், உத்தியோகத்துக்கு ஆள் பொறுக்குதல் அனைத்திலும், வடக்கு தலையிடுகிறது என்கிற உண்மையையும், அது எவ்வளவு தூரம் தேசீயத்தில் அமிழ்ந்தியோரானாலும், அவர்தம் மனதை உறுத்துகிறது என்பதையுமே, வெளிப்படுத்துகிறது.

இந்தப் 'பெருமூச்சுகள்' ஓயத்தான் திராவிட நாடு திராவிடருக்கே என நாம் சொல்லுகிறோம். எங்கே ஏற்றுக்கொள்ளுகிறார்கள், இவர்கள்.

★

## சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்

முகவரியை மாற்றும்படி எழுதுபவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

மானேஜர்.

## திருமணம்

—::—

காஞ்சி, 3–4–55 அன்று காலை செல்வன் வேலு – செல்வி சானகி; செல்வன் சு. திருவேங்கிடம் – செல்வி செந்தாமரை வாழ்க்கை ஒப்பந்தம், ஆலடிபிள்ளையார் கோயில் தெருவில், ஈழத்தடிகள் தலைமையில் நடைபெறும். அண்ணாதுரை, சி. வி. எம். அண்ணாமலை, கே. டி. எஸ். மணி ஆகியோர் பேசுவர்.

★

# முத்துக் குளித்தல்

[ சாகேதராம் பி. ஏ. ]

எகிப்து நாட்டுப் பேரழகி, கிளியோபாட்ராவின் காதில் தமிழகத்து முத்து சதிராடிற்று!—என்று எக்களிப்போடு சொல்வதுண்டு, தோழர்கள்.

சரித நிகழ்ச்சிபோலும்! முத்து இப்போது எங்கே எடுக்கிறார்கள்!! என்றுகூட எண்ணிடுவோரும், உண்டு.

அவர்களை அழைக்கிறோம்—அதோ, தூத்துக்குடியைப் பாரீர்! மூச்சடக்கி முத்து எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது, சிலநாட்களாக.

முத்தெடுத்தல், நமது பழைய தொழில்—அதுபற்றி 'தமிழ்நாடு' இதழில் வெளிவந்துள்ள, கட்டுரை இது:—

முத்துக்குளித்தல் நம் தென்னாட்டில் நவீனமுறைகளோடு அதிகமாய் வளர்ச்சியடையாதபோதிலும் இது தமிழ்நாட்டாரின் தனிப் பெருந் தொழிலாக உள்ளது. நம் நாட்டு முத்துக்கள் கோர்த்த மிக மெல்லிய ஆடைகள் பல நூற்றுண்டுகளாகவே கிரேக்க எகிப்திய அரபு, சீன நாட்டினரையும் கவர்ந்தன. பளினி, கெரிப்ளுஸ் நூலாசிரியர்கள்டெமஸ்தனிஸ் அர்ரைன், டால்மிபோன்ற இன்னும் பலபண்டைப் பெரியாரும் நம் நாட்டு முத்துக்களைப்பற்றி மிகுதியாகக் கூறியுள்ளனர். 4000 ஆண்டுகளுக்கு முன் பாடம்செய்த "மம்மி" என்ற எகிப்திய அரசஅரசிகளின் சடலங்கள் நம் நாட்டு மெல்லிய ஆடைகளினாலும், முத்துக்களினாலும் மூடப்பட்டிருந்தனவாம்.

பாண்டிய நாட்டுக் கொற்கை; காயல் ஆகிய துறைமுகப் பட்டிணங்களை அடுத்தும் தாம்பிரபரணி சங்கமமாகும் கடலிலும் மிகமுக்கியமாக முத்துக்குளித்தல் ஆதி காலத்தில் நடந்து வந்தது. கடுந் தண்டனைக்குட்பட்ட பெருங்குற்றவாளிகளைப் பெருவாரியாக இம் முழுகும் தொழிலில் அக்காலத்தில் படுத்தினர் என்றும் தெரியவரும்.

சின்னஞ்சிறு பிராயத்திலிருந்தே பழகியவர்களும் தலைமை தாங்கித் திறமையுடன் இதை நடத்திவருகின்றனர். வெளிநாட்டு வணிகர்களும் தனவந்தர்களும் நூற்றுக் கணக்காகக்கூடி நிற்க, ஒருவர், இருவராக முத்துக் குளிப்பவர்கள் கூட்டம் கூட்டமாய்க் கடலினுள் மூழ்குவர். அரையிலும், புயங்களிலும் மேல் நோக்கிய கயறுகள் கட்டிக்கொண்டு கீழே தொங்கும் பருங்கற்களுடன் விரைவில் இறங்குவர். பலர் முகமூடியின்றியும் மிக்க மனோவலிவுடனும் நீரினுள் செல்வர். கடலுக்கடியில் சிப்பிகளை அள்ளியும் பறித்தும் தங்கள் வலைகளிற் போட்டுக்கொள்வர். பின் அதற்கென ஏற்பட்ட மேல் நோக்கிய கயிறுகளை அசைப்பர், விநாடியில் மேலே கப்பல், படகில் இருப்போர் அவர்களை மேல் இழுத்துக் கரை சேர்த்துக்கொள்வர். சேகரித்த சிப்பிகள் வெளிக்கொண்டு கரையில் குவிக்கப்படும். ஒரு முறை குளித்தவர் அத்தினமே பின்னும் ஆறு ஏழு முறையும் கடலின்கீழே செல்வதுண்டு.

இவ்வாறு குளிப்பதில் பற்பல அபாயங்களும் நேரும். தீங்கிழைக்கும் திமிங்கிலத்திற்கும் பற்றித் தின்னும் பரும சுறாக்களுக்கும் இரை ஆவோர் பலராம் சுவாசமிழப்போரும், கொடிய விஷ ஜந்துக்களால் மாய்வோரும் மிகப் பலராம். இதற்கென இத்தொழிலுள்ளவர்களில் முதியோர் கடல் பிரயாணிகளின் தீங்குநேராதவாறு கடல் முழுகுவோர்க்கு முன் கூட்டியே மந்திரிப்பதும் உண்டாம். தீங்கிலிருந்து காத்துக்கொள்ள இருவரிருவராயும், மைத்துனன் மாமனையும் நீரினுள் முழுகுவதும் வழக்கம்.

கி. பி. 1700-ல் டச்சுக்காரர் தூத்துக்குடி அருகில் முத்துக்குளிப்பு நடத்தினர். அதில் தொழில் பொறாமை கொண்டோரும் கொள்ளையடிப்போரும் ஒருவருக்கொருவர் பொருது நீரினுள் உயிர் மாய்த்துக் கொண்டனராம். சிலர் இதற்கென சூரிபோன்ற ஆயுதங்களையும் தாங்கி இறங்கினர் என்று வரலாறு கூறுகிறது.

கி. பி. 1064க்குப்பின் சோழ மன்னர்கள் 1310ல் முகமதியர் பின்மைசூராக, நாயக்க மன்னர்கள் ஆகியோரின் காலங்களில் பாண்டி நாட்டில் மாறிமாறி கொற்கை காயல் ஆகிய இடங்களில் கடலில் முத்துக்குளித்தல் செழித்து வந்தது. கி. பி. 1480 ஆம் ஆண்டில் பெரும் புயல் அடித்தது. மக்கள் போக்குவரத்துக்குச் சாதகமாக இலங்கையையும் இராமேஸ்வரத்தையும் இணைத்து நின்ற "சேது" என்ற திருஅணை கடலில் மூழ்கியது. கடல் நீரோட்டங்கள் திசை மாறின. முத்துப்பூச்சி உற்பத்தித் தலங்களும் சிதறின. பின்னர் மற்றொரு புயலும் வந்தது. பாம்பன் இராமேசுவரம் மண்டபம் இணைப்பாயிருந்த நாயக்கமன்னர் தளவாய் இராலப்பையர் அணையும் நீரினுள் அழுந்தியபோது முத்துச் சிப்பி உற்பத்தி இன்னும் பாதிக்கப்பட்டது. கி. பி. 16-ம் நூற்றாண்டிலிருந்து தூத்துக்குடியைச் சார்ந்த கடலில் மீண்டும் முத்துச் சிற்பி உற்பத்தி ஏராளவு செழிக்கலாயிற்று.

பொதுவாக சிப்பிகள் முதிர்ச்சி அடைந்து பரும் முத்துக்கள் திரளப் பல ஆண்டுகள் ஆகுமாம். அதனால் ஓரிடத்திலே 20 அல்லது 30-ஆண்டுகளுக்கு ஒரு முறை தான் முத்துக் குளிக்கிறார்கள்.

கி. பி. 1796-ம் ஆண்டிலிருந்து தான் மிக்க விரிவான அளவில் முறையாக தூத்துக்குடிக் கடலில் முத்துச் சிப்பி, நற்சங்கு குளித்தல் தொடங்கப்பட்டது. இதனால் அரசாங்கத்திற்கு நல்ல வருவாயும் வருகிறது.

பருமன், ஒளி இவற்றைப் பொறுத்து முத்துக்கள் பல நூறு ரூபாய் விலைகளில்கூடப் பண்டைக் காலத்திலிருந்தே வெகு தொலைவிலுள்ள அன்னிய நாட்டிலும் மன்னர்களுக்கும், சீமான்களுக்கும் விற்கப்பட்டு வந்துள்ளன. நம் நாட்டுக் கடல் முத்துக்கள். நம்நாட்டு முத்துக்கள், பச்சை மிளகு இவைகளை ஏராளவேனும் வைத்திருக்கும் சீமான்கள்தான் இத்தாலிய நாட்டில் அந்நாட்டு அழகிகளை மணக்கத் தகுதி உடையவர்களெனக் கூட ஒரு காலத்தில் கருதப்பட்டதாம். இச்செய்தி நம்மவர்க்கு எவ்வளவு பெருமிதத்தை அளிக்கின்றது பாருங்கள்!

★

தொடர் சித்திரம்

# கடிகாரம்

19

[அண்ணா]

மருதவாணர், கோர்ட்டுக்குள் வந்ததும், எல்லோரும் எழுந்து நின்று மரியாதை செய்தனர். கடிகார வழக்கு சம்பந்தமாக தன்னுடைய சாட்சியத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதாக மாஜிஸ்திரேட்டிடம் மருதவாணர், தெரிவித்துக் கொண்டார். மாஜிஸ்திரேட், எதிர்க்கட்சி வக்கில் உள்பட 'பழைய' மாஜிஸ்திரேட்டான அவரது வேண்டுகோளுக்கு இணங்கினர். எல்லோரையும் போல எனக்கும் அவர் என்ன சொல்லப் போகிறாரோ, என்கிற ஆவல் அதிகமாயிற்று. மருதவாணர், எழுந்து நின்று தெரிவித்துக் கொண்டார்:-

இந்தக் கடிகார வழக்கு, மிகச் சாதாரண வழக்காயிருக்கலாம். இது பற்றி, வாக்குமூலம் கொடுக்க நான் ஏன் இங்கு வந்தேனென்று பலருக்கு திகைப்பாயிருக்கலாம். முதன் முதலில், இந்த வழக்கை நான் எடுத்துக்கொண்டபோது, இந்தக் கடிகாரத்தைப் பார்த்ததும் என்னால் என் கண்களையே நம்ப முடியவில்லை! எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு, என்னிடமிருந்த கடிகாரம், இது. பார்——அட்——லா படிப்பிற்காக, இங்கிலாந்துக்குச் சென்றிருந்த காலத்தில், நான் விலைகொடுத்து வாங்கிய கடிகாரம். விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த கடையில் அதைக் கண்டபோது, கண்ணைக் கவர்ந்தது! விலைக்கு வாங்கினேன். தாய் நாடு திரும்பியதும், என்னுடைய வெளிநாட்டுப் பயணம் சுகமாக முடிந்ததற்காக சிங்கார மடத்துக்கு, ஜகத் குருவை வணங்கிவிட்டு வரச் சென்றேன். சிறுவயது முதல், எனக்கு தெய்வீகக் காரியங்களில் மிகவும் நம்பிக்கையுண்டு. அதிலும் சிங்காரமடத்தின்மீது அபார பக்தியுண்டு! லண்டனுக்குப் புறப்படுவதற்கு முன்பு கூட மடத்துக்குப் போய் விபூதிப் பிரசாதம் வாங்கிக் கொண்டுதான், புறப்பட்டேன். விவேகானந்தர், அமெரிக்காவுக்குப்போய் நமது இந்துமதப் பெருமைகளை உணர்த்தியதுபோல் நாமும் வெளிநாட்டுக்குப்போனால் நமது இந்துமத சம்பிரதாயங்களை உணர்த்த வேண்டுமென்ற ஆசை என் மன ஆழத்தில் கிடந்தது.

இதனால் லண்டன்மாநகரில், நான் ஏளனத்துக்கு ஆளானதுண்டு! நெற்றியில் விபூதியோடு சென்ற என்னைக் கண்டபலர், "அது என்ன தூசி?" என்றுகூடக் கேட்டதுண்டு. விபூதியின் பெருமையை உணர்த்த அப்படிக் கேட்டவர்களிடம், எவ்வளவோ புராணக் கதைகளையெல்லாம் சொல்லுவேன். அவர்கள் நம்பினாலும் நம்பாவிட்டாலும், கேலி செய்தாலும் கிண்டல், புரிந்தாலும், நான்மட்டும் நம்முடைய ஆச்சாரங்களைக் குறைத்துக்கொண்டதில்லை.

அப்படிப்பட்ட நான் இந்தக் கடிகாரத்தை விலைக்கு வாங்கியபோது, என்னோடுபழகிய இங்கிலீஷ்கார நண்பர் ஒருவர் கூடக் கேட்டார், "இந்துமதப்பெருமைகள் நிரம்பியது இந்தியா என்கிறீர்களே! இதுபோல, ஒரு கடிகாரத்தைக் கண்டுபிடிக்க இதுவரை உங்களால் முடிந்ததுண்டா?" என்பதாக. நான் அவருடைய அஞ்ஞானத்தைக் கண்டு வியந்தேன்! "மெஞ்ஞான பூமி, எங்களுடையது. லௌகிக ஆசைகளைக் கடந்து, ஜீவன் முக்திதேடும், சிறப்புறு மார்க்கம் காட்டும் தேசம் எங்களுடையது. மும்மலம் நீக்கி, மோக விகாரம் அறுத்து, வாழும் முனீஸ்வரர்கள் வாழும் பூமி. நான் இன்னும் பரிபக்குவம் அடையவில்லை! அதனால்தான் இந்த இகலோக இச்சைகள் இன்னும் என்னைவிட்டு விலகாமல் ஆட்டிப் படைக்கின்றன" என்றெல்லாம் சொன்னேன். நண்பர், புரிந்துகொள்ளவில்லை! அவர் புரிந்துகொள்ளாத அளவுக்கு 'ஆத்ம விஷயம்' எனக்குத் தெரிகிறது — என்று எக்களிப்பு கொண்டேன்.

தாய்நாட்டுக்கு வந்ததும், தயாபரனுக்கு அடுத்தபடியிருப்பவர்கள் என்று நான் எண்ணிய சிங்கார மடத்து ஜகத் குருவை தெரிசிக்கப் போனேன். அப்போது, ஜகத்குரு, என்கையில் நான்கட்டியிருந்த கடிகாரத்தைப் பார்த்துக் கேட்டார் —ஆசையோடு கேட்டார். "ஐயன் சந்நிதானத்துக் குரியவையாகும், புதுமையான பொருள்கள். அப்பனே, நீசர்கள் தேசம் சென்று வந்த நீ, அய்யனுக்கு ஏதாவது அளிக்க வேண்டாமோ?" என்றார்.

அர்ச்சனை! அபிஷேகம்! ஆராதனை! குருபூஜை!—எல்லாம் செய்வதாகச் சொன்னேனே தேவா" என்றேன். "அவைகளையும் செய். அதோடு, நீ கட்டியிருக்கும் கடிகாரத்தையும் கொடு, ஆண்டவனின் கரத்தில், உன் ஞாபகமாக இருக்கட்டும்" என்றார்.

ஆண்டவனுக்கேன். இந்தக் கடிகாரம்?—என்று யோசித்தேன். நான் யோசிப்பதைப் புரிந்துகொண்ட ஜகத்குரு, "அப்பனே! யோசிக்கிறாய்போலும், ஆண்டவனுக்கு ஏன் இந்தக் கடிகாரம் என்று. காலத்தைவென்ற கருணாநிதிக்கு ஏனிந்தக் கடிகாரம்? வேண்டாம்! ஆனாலும், நான் ஏன் கேட்கிறேன். இதோ, பார். இது, என்ன...?" என்று ஒருசிறு ஆகாய விமானத்தை எடுத்துக் காட்டினார்.

வெள்ளியால் செய்த ஆகாய விமானம்! வெளிநாடு சென்று சந்தோஷமாகத் திரும்பிய வீரமுத்து செட்டியார், பிரார்த்தனை செய்துகொண்டு செய்து வைத்ததாம், அது!! வீரமுத்து செட்டியார், வைஸ்ராயின் நிர்வாகக் கவுன்சிலில் இருக்குமளவுக்குப் பேர், பெற்றிருந்தவர். பெரிய அறிஞர்! உலகமே புகழும் அறிஞர்!! அவர், வெள்ளியால் ஆகாயவிமானம் செய்து, வேண்டுதலை செலுத்தியிருக்கிறார். அப்படியிருக்கும்போது, ஆசையோடு வாங்கிவந்த கடிகாரத்தையும் ஐயனுக்குப்படைப்போம்! —என்று குருநாதரிடம் கொடுத்தேன். குருநாதரும், ஈசனின் கரத்தில் கட்டி, அந்த ஆனந்தக் காட்சியை எனக்குக் காட்டினார்—"மருதவாணம்—என்றும் உன்னுடைய ஞாபகமாக ஈசனின் கரங்களில் இது விளங்கும்" என்று சொன்னார்

அதுமுதல் அடிக்கடி அங்கு செல்லும் போதெல்லாம், ஆண்டவனின் கரத்தில் அது கட்டப்பட்டிருப்பதைக் கண்டு பெருமகிழ்ச்சியடைவது வழக்கம். அப்படிப்பட்ட கடிகாரம், மடத்தில் ஏற்பட்ட விவசாயிகள்கலவரத்தின் போது திருட்டுப்போய் விட்டதாக நானோர்முறை சென்றிருந்தபோது, ஜகத்குரு தெரிவித்து மிகவும் வருந்தினார். அப்படிப்பட்ட கடிகாரம், வழக்கில் சிக்கி, வந்தது என்னிடம்.

பார்த்தபோது, திடுக்கிட்டேன்! அந்தக் கடிகாரத்தை ஏழை விவசாயிகள் திருடிக்கொண்டு போய் விட்டதாகச் சொன்னார்கள், மடத்தில். ஆனால் இப்போது அது இருப்பதோ, வரதனிடமும் வள்ளியிடமும்! எப்படி வந்தது இந்த ஏழைகளிடம்? — என்று நினைத்தேன். அவர்களிருவரையும்பார்த்தபோது, ஈஸ்வரனுக்காக நான் செலுத்திய காணிக்கை இவர்களிருவரையும் இழுத்துக்கொண்டு வந்து என்னெதிரே நிறுத்தியிருக்கிறதே என்பதை எண்ணியபோது, எனக்கு என்னமோபோலிருந்தது. "சாவி கொடுத்தால், மீண்டும் ஓடலாம் இந்தக் கடிகாரம். ஆனால், உலகில் வாழ முடியாமல் திண்டாடும் திக்கற்றோரின் வாழ்க்கைக் கடிகாரத்தை ஓடச்செய்ய, சாவி ஏது? பணமா! ஓரளவு, ஒப்புக்கொள்ளலாம். அந்தச் சாவி இல்லாததால்தானே, வரதன் திருடனானான். வள்ளி, சந்திக்கு வந்தாள்" என்கிற எண்ணங்கள் எதிரொலித்தன, மனதில். என் மனதில் வந்ததையெல்லாம், எழுதியபடியே இருந்தேன். அந்த நினைவை, என்னால் தாங்க முடியவில்லை! மயக்கமடைந்து விழுந்துவிட்டேன், வழக்கமாக வரும் மார்பு வலியால். இப்போது கேள்விப்பட்டேன்! இந்தக் கடிகாரத்தை, மடத்தில் வேலைக்கு இருந்த வள்ளி திருடிக்கொண்டு வந்ததாகவும் ஜகத்குருவின் சார்பில் சாட்சியம் கிடைத்திருப்பதாகவும். அப்படியானால் விவசாயிகள் கலவரத்தின் விளைவாக திருட்டுப் போனதாக என்னிடம் காலஞ் சென்ற ஜகத்குரு சொன்னதுபொய்யா? அல்லது இப்போதிருக்கிற ஜகத்குரு, சொல்வது பொய்யா? இந்த விஷயத்தைத் தீர, ஆலோசித்து, தீர்ப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த நேரத்தில், இந்தக் கடிகார வழக்கு வந்தது முதல், என்மனதில் ஏற்பட்டிருக்கிற எண்ணங்களைச் சொல்ல வேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்கிறது.

"கோர்ட்டுகளில் கொண்டுவந்து நிறுத்தப்படும் குடிகாரன், கூத்திக்கள்ளன், கொலைகாரன் முதலியோரைப் பார்க்கும்போதெல்லாம் எனக்கு அடிக்கடி ஒரு சந்தேகம் எழும்புவதுண்டு. ஆலயங்கள் ஆயிரமாயிரமுண்டு, அனுதினமும் மக்களை உய்விக்க நடைபெறும் காலேட்சபங்களும் உபன்யாசங்களும் லட்சோப லட்சம். ஜகத்குருக்கள் ஏராளம்! தம்பிரான்கள் மிகப்பலர்! — சதா சர்வகாலம் உலகை உய்விக்க இவர்கள் ஆண்டவனின் திருநாமப் பெருமைகளைச் செப்புவதாகவும் நம்புகிறோம். பஞ்சமாபாதகங்கள், என்கிறது புராணம்! ஆயினும். நாட்டில், இன்னும் திருட்டும் கொலையும், சூதும் பொய்யும் இருக்கக் காரணம் என்ன? எல்லோரும் ஈசனின் பிள்ளைகள் என்றால் ஒரு பிள்ளை உப்பரிகையிலும், இன்னொன்று ரோடு ஓரத்திலும் இருக்கக் காரணம் என்ன?" இப்படி அடிக்கடி எழுதப்பட்டுவரும் ஏடுகளை நான் படிப்பதுண்டு. இப்படிப்பட்ட ஏடுகளில் ஒன்றுதான் 'திராவிடநாடு'! அதைப் படிக்கும்போது, பலசமயங்களில், எனக்கே சந்தேகமும் சஞ்சலமும் ஏற்படுவதுண்டு. எனினும், ஆண்டவன் மீது இருந்த பக்திமட்டும் குறையாமலிருந்தது! ஆனால்,இந்தக்கடிகார வழக்குக்கு முதல் நாள், வீட்டு மொட்டை மாடியில் உட்கார்ந்து கொண்டிருந்தபோது ஒலிபெருக்கி வாயிலாக பெருமைத்தம்பி என்கிற பேச்சாளர் பேசிய சொற்கள் என் காதில் விழுந்தன.

**"ஐயோ! என்னை விடுதலை செய்யப்பா. யுகயுகாண்டுகளாய் வதைகிறேன், நான். என்னைக்கம்பிக்குள் பூட்டிவிட்டு. பக்தன் மட்டும் பீச்சுக்குப் போகிறான். இஷ்டம்போல் திரிகிறான். ஆனால் என்னைமட்டும் விடமாட்டேனென்கிறான். பார் இந்த அவதியை! தேனை ஊற்றுகிறான், தலையில். அதை ருசிக்கவரும் எறும்புகள் என்மீது உலவுகின்றன. இந்த அக்கிரமம் எங்காவது உண்டா? சூடத்தைக் கொளுத்தி என் முகத்துக்கருகே பிடிக்கிறான். துடிக்க மாட்டேனா, நான்? அப்பா, இந்தத்தொல்லைகளிலிருந்தெல்லாம் எனக்கு விடுதலை வாங்கித்தா! நீ, ரொம்ப நல்லவன். நீ சீக்கிரம் திராவிடநாடு பெற வேண்டுமென வாழ்த்துகிறேன். அப்போது என்னையும் விடுதலை செய்து விடுவாயல்லவா?"**

இப்படி ஆண்டவனுக்குப் பேசவாயிருந்தால், அவரைப் பரார்த்துக் கேட்பாராம்! ஏனென்றால், பக்தர்கள் பரமனை படுத்தும்பாடு அப்படியிருக்கிறதாம்!! இந்தப்பேச்சு, என் மனதைவிட்டு மாறவில்லை—நெடுநேரம், பேச்சுத் திறமையையும் அதில் கலந்திருந்த நகைச்சுவையையும் எண்ணி எண்ணிப் பார்த்தேன்.

அந்த எண்ணம் ஆலமரமாகி வந்தது இதயத்தில். என்னுடைய கடிகாரத்தையும், அதன் மூலம் இருவர் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட்டிருப்பதையும் எண்ணியபோது 'கோயில்கள்—மடங்கள்— அடியார்கள், என்பவைகள்மீது எனக்கே நம்பிக்கையில்லாமற் போய்விட்டது: கொடியவர்தம் கோட்டங்களாகிவிட்டன கோயில்கள்! ஆண்டவன் பெயர் சொல்லி அட்டகாசம் புரிவோராகிவிட்டனர் அடியார்கள்! மனிதன், இன்னொருவனை ஏமாற்ற இவைகளையெல்லாம் பயன்படுத்துகிறான். எல்லா உயிரும் ஈசன் கோயில்! என்கிற உயர்ந்த எண்ணம் கருகிவிட்டது, என்கிற திடமான முடிவுக்கு வந்துவிட்டேன். ஆச்சரியமாயிருக்கலாம் உங்களுக்கு! மனித ஜாதியில், ஒவ்வொருவனுக்கும், தன்னுடைய சொந்த விஷயத்தில் சிக்கல்கள் உண்டாகும்போது, "ஞானம்" ஏற்படுகிறது. அதுபோல, எனக்கும் அறிவொளி ஏற்பட்டுவிட்டது! திகைக்கலாம் நீங்கள்! ஒருநாளிலா இவ்வளவு பெரிய மனமாற்றமென்று. உண்மைதான். கனம் தாங்கிய கோர்ட்டார் அவர்களை வளர்த்தவில்லை நான் உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன் கடிகாரம் சிங்கார மடத்துக்குரியது அல்ல; என்னுடையது; வள்ளி, திருடியல்ல; ஆகவே, வரதனையும் வள்ளியையும் விடுவித்து பொய்சாட்சியம் சொல்லிய குற்றத்துக்காக மடத்து மானேஜரையும். ஜகத்குருவையும் விசாரித்து நீதியை நிலைநாட்டுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். பழைய மாஜிஸ்திரேட் என்பதால், இவ்வளவையும் சொல்ல, எனக்கு அனுமதியளித்த உங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றி" என்று கூறிமுடித்தார், மருவாணர்.

நிசப்தம் நிரம்பியிருந்த கோர்ட்டில், மருதவாணர் பேசி முடித்ததும், ஒவ்வொருவரும் அவரவர்

மனதுக்கு ஏற்றபடி பேசலாயினர். எனக்கோ, புரியமுடியாத புதிர் உடைபட்டதோடு, வரதனும் நாச்சியும் நிச்சயம் விடுதலை பெற்று விடுவார்கள் என்கிற நம்பிக்கை உண்டாயிற்று. அதனுல், என்ன தீர்ப்பு கிடைக்குமோ, என்று எதிர் பார்த்தபடியே இருந்தேன்.

சர்க்கார் வக்கில் எழுந்தார்—மருதவாணருடைய சாட்சியம் செல்லாதென்றும் அவர் மயக்கமடைந்து வேலையினின்றும் நீங்கியதிலிருந்து சித்த சுவாதீன மிழந்து கிடப்பதாகவும் எனவே அவருடைய வார்த்தைகளை ஒரு பொருட்டாக மதிக்கக்கூடாதென்றும், எடுத்துச் சொன்னுர்.

அதைக் கேட்ட மருதவாணர், "இல்லை! இல்லை!! சித்தம் கெடவில்லை, எனக்கு. பித்தனல்ல, நான்,பித்தனல்ல!" என்றுகூவினுர் கோபாவேசத்தோடு. அதிர்ச்சி உண்டானுல், அவருக்கு ஏற்படும், மார்புவலி ஏற்படவே, அப்படியே மயக்கமடைந்து சாய்ந்தார். அவரை, முதலில் வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போகும் ஏற்பாடுகளைச் செய்தார்கள்.

நீண்ட நேரம் கழித்து, மாஜிஸ்ட்ரேட் தீர்ப்புச் சொன்னுர், "சிங்கார மடத்திலிருந்து கடிகாரத்தைத் திருடியது வள்ளியென்பது, நிச்சயமாகிவிட்டது—மடத்து மானேஜர் சாட்சியப்படி. அதை எடுத்து, வட்டிக் கடைக்கு வந்தவன் வரதன் என்பதும் தெளிவாகியிருக்கிறது. சின்ன விஷயமான இதற்காக, சிங்காரமடத்து ஜகத்குரு அவர்கள், பொய் சொல்வார் என்று யாரும் கருதமுடியாது. மருதவாணரின் சாட்சியங்களை, என்னுல், ஏற்பதற்கு இல்லை. ஆகவே, தொலைந்துபோன கடிகாரத்தை, மீண்டும் சிங்காரமடத்துக்குத் தருமாறு உத்திரவிடுகிறேன். திருட்டுக்குற்றம், திருடிய பொருளை விற்க முயன்ற குற்றம் ஆகியவைகளுக்காக வரதனையும் வள்ளியையும் தண்டிக்க வேண்டியது அவசியம். இப்படிப்பட்ட திருடர்களால் தான் சமூகத்தின் அமைதிக்கே பங்கம் ஏற்படுகிறது. ஆயினும் இத்தனை நாள் வரை அவர்கள் ஜெயிலிலிருந்ததையும் உத்தேசித்து, இருவருக்கும் தலா ரூபாய் நூறு அபராதமும் கட்டத் தவறினுல் இரண்டுமாதம் சிறைவாசமும் அளிக்கிறேன்" என்று கூறிமுடித்தார்.

ஐயமணி—லோககுருவாக இருக்கிருன்.

நல்லான் — நடைப்பிணம்போல, என்னெதிரே.

நாச்சி—உலர்ந்த கூடாக இருக்கிருள்.

வரதன்!—அவனைப்பார்க்கவே, சங்கடமாயிருக்கிறது.

தீர்ப்போ, இப்படி! எங்கே போவார்கள் இந்த ஏழைகள் ரூபாய் இருநூறுக்கு? நீதிகூடவா, அக்கிரமக்காரர்களைக் கண்டு அஞ்சவேண்டும். இப்படி எண்ணினேன்! இருவர் சார்பிலும், அபராதத்தைக் கட்டிவிட்டு, அவர்களை அழைத்துக்கொண்டு வந்தேன்.

அதோ! அழகான ஒரு தோட்டமும், ஒரு குடிசையும் தென்படுகிறதே—அதுதான், இப்போது எனக்கு—நாச்சி ,வரதன், நல்லான், மருதவாணர் ஆகியோருடைய இலட்சியக் குடிசை. அதன் முகப்பில் தொங்குகிறது, 'புதுவாழ்வுக் கழகம்' என்றெரு போர்டு! அதன் செயலாளர், நான்! தலைவர், மருதவாணர்!! கழகத்தின் பேச்சாளர்கள் நாச்சியும், நல்லானும்!!! வரதன்கூடத் திருந்தி வருகிருன் —இன்று மாலைகூட இருக்கிறது, ஒருகூட்டம், கிராமத்தில். ஐயமணிகளின் வேஷங்களை வெளிப்படுத்தும் வரையில், எங்களுக்கு ஏது ஓய்வு? வணக்கம் போய் வரட்டுமா!!

முடிவுபெற்றது.

# "எந்தக் கட்சியையும்!"

"எந்தக் கட்சியாயிருந்தாலும் சரி—எரிஞ்சகட்சியா! எரியாதகட்சியா!!—கோயில் விபூதியை யார்வாங்குகிறது என்கிற தகராறுமுதல், கூட்டத்திலே புகுந்து கலாட்டா செய்கிறதுவரை, எதுவாயிருந்தாலும் இவர் இஷ்டந்தான்!"

கிராமத்து 'இல்லாடி'களில் சிலர், இப்படி கித்தாப்பு பேசுவதுண்டு!

விட்டேனு பார்—போனவாரம் மூலைத்தெரு விநயகம் கொஞ்சம் திமிறினுன், முதுகை கொழுக்கட்டையாக்கினேன்—நேற்று முத்து முறுக்கினுன் மீசை, நல்லா நடத்தினேன் பூஜை—இவருகிட்டேயா முடியும்—இவரு யாரு தெரியுமா, இப்படியெல்லாம் தன்னுடைய திறமையைக் குறித்து, தோள் தட்டிக்கொள்வதுண்டு.

இப்படிப்பட்டவர்களுக்கென்று, எவ்விதகொள்கையும் இருக்காது! காற்றடிக்கும் திக்கில், சாய்வர். உடம்பில் தெம்பும், 'வஸ்தாது' செய்யத் தெரியும் என்கிற தைரியமும், ஊரார் பயப்படுவார்கள் என்கிற எண்ணமும், இப்படியெல்லாம் ஈடுபடச் செய்யும் அவர்களை. இப்படிப்பட்டவர்களை வீதிச் சண்டை, நிலத்தகராறு, கோயில் மான்யக் கலவரம். ஆகியவைகளின் போது அதிகமாகக் காணலாம்.

*

இதோ, ஒரு வஸ்தாது! அரசியல் உலகில்!!

அவருக்கு எந்தக் கட்சியையும் முன்னின்று, நடத்துவதே இயல்பாகி விட்டதாம்.

எந்தக் கட்சியையும்!—அது அம்மன் கோயில் கும்பாபிஷேகக் கட்சியானுலும் அழகுத்தமிழ்பரவப் பாடுபடும்கட்சியானுலும் ஐயப்பனைத் தோளில் சுமக்கும் கட்சியானுலும் 'அதெல்லாம் தப்பு' என்று சொல்லும் கட்சியானுலும் காங்கிரசானுலும் கம்யூனிஸ்டானுலும், பார்ப்பனர்களின் கூடாரமானுலும் பார்ப்பனரல்லாதவர்களின் கொள்கைக் கூடமானுலும், எதாயிருந்தாலும் முன்னின்று நடத்துவது இயல்பாகி விட்டதாம்.

"இவர்யார் தெரியுமா? மாலையைக் கண்டால்போதும் உடனே, கழுத்தைக் கொண்டுபோய் நீட்டுவார்."

என்று கேலிக்குச் சொல்வர், சிலரைப்பற்றி! இவர், தானே முன் வந்து சொல்கிருர்—எந்தக்கட்சியானுலும் முன்னின்று நடத்துவது இயல்பாகிவிட்டதாம்!! எந்தக் கட்சியானுலும்—அது எரிஞ்ச கட்சியாயிருந்தாலும் சரி எரியாத கட்சியாயிந்தாலும்சரி, இயல்பாகி விட்டதாம், அவருக்கு.

"சார்! என்னசார் பண்றது சிகிரெட்பிடிக்கிறதை விடணும்னு தான் நினைக்கிறேன். ரொம்ப நாளைய பழக்கம். விடமுடியலே!"

"பொடிபோடுகிறது கெடுதல்னு தெரியுது, நல்லா. என்னங்க

பண்றது? கெட்ட பழக்கமாப் போச்சு!''

"சாப்பிடும்போது, வெந்நீர் இல்லேன்னு, எனக்கு சாப்பிட்டதுபோலவே இருக்கிறதில்லிங்க''

இப்படிச் சொல்வதுண்டல்லவா, பலர்—தத்தமக்கு ஏற்பட்டுவிட்ட பழக்கவழக்கங்களைப்பற்றி! அது போல இவரும், சொல்கிறார்—இயல்பாகிவிட்டதாம், எக்கட்சியையும் முன்னின்று நடத்துவது!!

"ராஜகோபாலாச்சாரியார் வந்தார், முதல் மந்திரியாக. அவரைப் பாராட்டினேன்—அவருக்குப்பலம் சேர்க்கிறதுக்காக எம். எல். ஏக்களையெல்லாம் கூட்டிவைத்து 'டீபார்ட்டி' கொடுத்து, அவரையே ஆதரிக்கணும்னு கேட்டுக்கொண்டேன். சட்டசபை கூட்டமானாலும், சன்மார்க்க சங்கமானாலும், அவருக்கு ஆதரவு தரவேண்டுமென்று எல்லோரையும் கேட்டுக்கொண்டேன்.''

"அவர்போனார்! காமராஜ், வந்தார். ராஜகோபாலாச்சாரியை எதிர்த்தவராச்சே, இவர் என்று நினைத்தேனா? இல்லை! இப்போது, எங்கேபோனாலும், சட்டசபையிலேயிருந்து சாதாரண டீக்கச்சேரி வரையிலே, "எல்லாரும் காமராஜருடைய ஆட்சியை ஆதரிக்க வேண்டும். என்றுதான் சொல்லுகிறேன்''

"இப்போதுமட்டுமா! இந்தக் காமராஜர் கட்சி, கொடியைப் பிடித்துக்கொண்டு தடியடி வாங்கிக் கொண்டிருந்ததே, அப்போதும் நான் முன்னேதான் இருந்தேன்! தினசரி கவர்னரோடு, கைகுலுக்குவேன் — வெள்ளைக்காரர்களுக்கு விருந்துவைப்பேன்—'ஜஸ்டிஸ்கட்சியே என் வீட்டில்' என்று இருந்தேன். போகிற இடமெல்லாம், இங்கிலீஷ்காரர்களே நல்லவர்கள் என்று பேசினேன். அதனால், மந்திரியாகக் கூட இருந்தேன்.''

"பிறகு! யாரோ சிலர் புகுந்து ஜஸ்டிஸ் கட்சிக்கும் பட்டம் பதவிக்கும் இடமில்லையென்று கழகம் ஏற்படுத்தி, வடநாடு தென்னாடு என்று பேச ஆரம்பித்தார்கள் அதைப் பற்றியும், சமயம் ஏற்படும் போது, 'டச்' பண்ணாமல், விடுறதில்லை நான்''

"எந்தக் கட்சியாயினும் சரி, என்றுமட்டும் எண்ணாதீர்கள் எந்தப்பதவியானாலும் கூடச்சரி—முன்னின்று வகிப்பது, எங்கள் குடும்ப இயல்பாகிவிட்டது. பாருங்கள், நான் எம். எல். ஏ.! பச்சையப்பன் கல்லூரிபோர்டு என்கைவசம்! சென்னைமாகாண வர்த்தகசபை என் தம்பியிடம். இன்னொரு தம்பி, சென்னைக்கே மேயர்.''

இப்படி வெளிப்படையாக விவரிக்காமல், சுருக்கமாகவே சொல்லிவிட்டார், செட்டிநாட்டு குமாரராஜா முத்தையா செட்டியார்—எந்தக்கட்சியையும் முன்னின்று நடத்துவது! இயல்பாகிவிட்டதாம்!! கோவையிலிருந்து வரும் **'வசந்தம்'** என்ற ஏடு தன்னுடைய 12வது இதழின் 36ம் பக்கத்தில், அண்ணாமலைநகரில் பாரதியாருக்கு நடைபெற்ற பொன்னாடை போர்த்து விழாவில், இவ்வண்ணம் பேசியதாக வெளியிட்டிருக்கிறது—புளகாங்கிதத்துடன்.

எந்தக்கட்சியாயிருந்தாலும்! முன்னின்று!!—ஆகா, என்ன வாய்ப்பு,

## வாங்கி அவர்க்கீவோம்!

(ஏஸ். பி. நடராசன், 'கைத்தறி')

வில்லேந்தி, வாளேந்திப் பகைவர் தங்கள்
தாளேந்தச் செய்தோரின் வழி வந்தோனே!
புல்லேந்திப் புழுகேந்தி, புகைந்து நாறும்
சொல்லேந்தி வாழ்கின்ற சழக்கர்! கூழாங்
கல்லேந்தி கற்கண் டென்கிறார்! அஃதைக்
கரமேந்தி ஏமாந்து விட்டாய்! தாவும்
புல் மந்திக் குணத்தோரின் திட்டத்தின்மேல்
புல்முளைக்கச் செய்திடுவோம் பொங்கியெழு தோழா!

திக்கெட்டும் கேட்கட்டும் நம் முழக்கம்!
திகைக்கட்டும் திருந்தட்டும் தீயோர்! இன்று
கக்கட்டும் கருவிழிகள் புரட்சித் தீயை!
கருகட்டும் கவைக்கொவ்வாத் திட்டம்! நம்மின்
இக்கட்டும் ஒடுங்கட்டும் இன்ப வாழ்வு
இருக்கட்டும் இனிக்கட்டும் நம் தோழர்க்கு!
சொக்கட்டும் நெசவாளர்! சூழ்ச்சி கெட்டு
சுடுகாட்டுக் கேகட்டும் உறங்கட்டு மங்கே

வாழ்வன்றிச் சாவிந்த இரண்டி லொன்று!
வளங்குன்றிப் போனோமே! நம்மை இன்று
சூழ்கின்ற இருள்வென்று, ஒளியும் நன்று
சுடர்கின்ற வழிசென்று, அச்சம் கொன்று
தாழ்வின்றித் தளர்வின்றித் தடைகள் வென்று
தாமென்று, தமக்கென்று, தமதுரிமை என்று
வாழ்கின்றோர் வாழ்வின்று வீழ்த்திடுவோம் என்று
சூளுரைத்துச் சுடர்வாளைத் தூக்கிடடா தோழா!

எட்டிப்பழ மினிக்கும்; எங்களுக்கு வேப்பங்காய்
கட்டிக்கரும்பாகும்; கரும்பச்சை பாவற்காய்
தொட்டாற் சுவையூறும்! தொகுமுள் ஊமத்தங்காய்
சொட்டுதுபார் செந்தேனை! என்போருள்ளம் கடுகாய்
கட்டுடலோ பூசணியாய், சிறுமூளை கடுக்காயாய்
கெட்டிருக்கும் வேளையிலே, நற்றிட்டம் ஆக்கிடவாய்
விட்டுரைக்க மாட்டாரே! பட்டாடை நெய்தோழா!
வட்டிக்கேனும் மூளைவாங்கி அவர்க்கீவோம் வா!

இவருக்கு. எதிலும், முன்னின்று தான் நடத்துவாராம். பெருமையோடு, சொல்லிக்கொள்ளுகிறார். அத்தகைய யோகம், அடிக்கிறது 'ஐயா'வுக்கு! சுயராஜ்யப் போரின் போது கேலிபேசினவர் என்பதற்'காக, காங்கிரஸ் அவரைக் கைகழுவிவிடவில்லை—'கடவுளுக்கு' அடுத்தநிலை அவர் குடும்பத்துக்கு—அங்கே—காமராஜருக்கு ஆசிர்வாதம் அளிக்கிறார்—கனம் 'நேரு'வுடனும் கைகுலுக்குகிறார்—அதே சமயத்தில் காங்கிரசிலிருந்து வெளியேற்றப்பட்ட தமிழரசுக்கழகத்தலைவர் என்றாலும், 'அருள்' புரிகிறார்—அணைத்து மகிழ்கிறார்—இப்படிப்பட்ட 'யோகம்' யாருக்குக் கிடைக்கும்! அந்தத் துணிவில்தான், எந்தக் கட்சியானாலும் முன்னின்று நடத்துவேன் என்கிறார்!!

தமிழ் நாவலருக்கு பொன்னாடை போர்த்திய விழாவில், இப்படிச் சொன்னாரல்லவா — 'எந்தக் கட்சியையும் முன்னின்று நடத்தும்இயல்புள்ள இவர்! அவரே, கடந்தவாரம் சென்னை சட்டசபையில், இன்னொன்றும் கூறியிருக்கிறார். சபையில்பேச எழுந்தாராம். தமிழ்ப்புரவலராயிற்றே! தமிழில்தானே பேசியிருப்பார்!! அல்ல, அல்ல. ஆங்கில மொழியில், பேச்சைத்துவங்கினாராம். அதைக் கண்ட இன்னொரு உறுப்பினர், **"ஏன் இங்கிலீஷில் பேசுகிறீர்கள்? தமிழில் பேசினால் என்ன!"**, என்று கேட்டாராம். அதற்கு, 'எந்தக் கட்சியையும் முன்னின்று நடத்தும் இயல்புள்ள இவர் என்ன பதிலளித்தாராம், தெரியுமா?" இங்கிலீஷில் பேசினால்தான் இந்தப்பத்திரிகைக்காரர்கள் போடுகிறார்கள்! தமிழில் பேசினால் போடுவதில்லையே!!", என்றாராம். பத்திரிகையில் பெயர் வருவதற்காக 'பாலிடிக்சில்' இருக்கிறார், என்ன செய்வது—எல்லாம், 'வெள்ளையப்பன்' செயல்!!

★

இந்தியா முழுவதற்கும் ஒரு முறை பொதுத்தேர்தல் நடத்துவதென்றால் சர்க்காருக்கு எவ்வளவு பணம் செலவழிக்கிறது தெரியுமா? ரூ. பத்துகோடி! மக்கள் செலுத்தும் வரிப்பணத்தில்தான் இச்செலவு!!


**ஏப்ரல் 17-ல்**

வெளிவரும்

## திராவிட நாடு இதழில்

# 'அரசாண்ட ஆண்டி'

பிரான்சு நாட்டு வரலாற்றுச் சுவடி தரும் சம்பவம்! — **அரசாண்ட ஆண்டி**

மத வேடமிட்டு அரச பீடம் ஏறுவோரால் ஏற்படும் ஆபத்தை எடுத்துக்காட்டும் — **அரசாண்ட ஆண்டி**

அரசுக்காக! நாட்டுக்காக!! என்று மயக்க மொழி பேசி மக்களை வாட்டும் கொடுமையை விளக்குவது — **அரசாண்ட ஆண்டி**

★

நூலேணி வழியாகத் தப்பிச் சென்ற

**மகாராணி**

பறவைக்கூட்டத்தில் பரவசமான

**பட்டத்தரசன்**

பாருகனிமொழி மாதே! உன் பாதமலர் தொழுதேனே! என்று பஜிக்கும்

**பிரபுக்கள்**

பரமண்டலத்திலே பிதா இருக்கிறார்! பாராள நான் இருக்கிறேன்! என்று பேசிடும்

**பண்டாரம்**

இவர்களின் கோலாகலத்தைக் காட்டுவது

**அரசாண்ட ஆண்டி**

★

சுவைமிக்க பகுதிகளாக

'திராவிட நாடு' இதழில்

வெளிவருகிறது

**அரசாண்ட ஆண்டி**

★

பிரான்சு நாட்டு வரலாற்றுச் சுவடியிலிருந்து

**அண்ணாதுரை**

தரும்

**சுவையும் பயனும் மிகுந்த கட்டுரைகள்**

அரசியல் விளக்கம் பெற

அனைவருக்கும் பயன்படும் வகையில், அமைந்திருக்கிறது.


Edited, Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
95, Tirukkachinambi St, Kancheepuram.